# தமிழர் தகவல்

# Tamils' Information


மார்ச் 2004
இலண்டன்



மாத சோதிடம்
உள்ளே!

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


Vahizan Disc World
Get up to 10% off !!!
From our online shopping!!!
வாகீசன் டிஸ்க் வேள்ட்
எம்மிடம் மிகப் பழைய காலத்து படங்கள் தொடக்கம் இன்றுவரையுள்ள வீடியோ பிரதிகள், வீடியோ சீடிகள், டீவிடிகள் என்பன வாடகைக்கு அல்லது மிகக்குறைந்த விலையில் சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ விற்பனைக்குண்டு.
இவற்றை விட சகலவிதமான பக்திப்பாடல்கள், கர்னாடகப்பாடல்கள், கர்னாடகவார்த்தியஇசைகள் யாவும் MP3,AUDIO CD, CASSETTE ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்.
WE SELL TITLES FROM INRECO,GEETHANJALI,VEDU,
RPG,AMUDAM AND FROM MANY OTHER FAMOUS COMPANIES!
Vahizan Disc World
52B Ealing Road, Wembley
Tel: 020 8902 8828
Email : Vahizan@aol.com
www.vahizan.com
Vmpv Video Ltd
537 HIgh Road, Wembley
Tel:020 8902 5055
Email:Videovmpv@aol.com


THARANI JEWELLERY
எத்தனை நகை மாளிகைகள் எழுந்து வந்தாலும் அத்தனையையும் விஞ்சி ஆதரவு பெற்ற அனைவர் தெரிவும் தாரணியே.
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 020 8902 6777

# தமிழர் தகவல் Tamils' Information

மார்ச் 2004 மலர்: 02 இதழ்: 09


"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." -குறள்

## அறுவடைக்கான ஆயுதம்

இதுவரை நடந்து முடிந்த பேச்சுவார்த்தைகள் எதுவுமே நாம் எதிர்பார்த்த எதனையும் பெற்றுத்தரவில்லை. நம் இடைவிடாத போராட்டம் தான் நமது இருப்பை முன்னையதைவிட அதிநுட்பமாக உணர்த்தியிருக்கிறது; நம்பக்கத்தே நீதியும் தேவையும் உண்டு என்பதை நிலை நிறுத்த உதவியிருக்கிறது. அதற்கான பெரும்பங்கை ஏற்றுக்கொண்டவர்களும், எடுத்துச் சொன்னவர்களும் விடுதலைப் புலிகள்தான். அற்புதமான அந்தத் தலைமையும் வழிநடத்தலும், தியாகமும் ஒரு புதிய வரலாற்றின் பொற்காலத்தை உருவாக்கித் தந்திருக்கின்றன. எட்டு ஆண்டுகட்கு முன் லக்ஷ்மன் கதிர்காமர், நியூயோர்க் பேட்டியொன்றில் சொன்ன வார்த்தைகள்; "உலகத்தின் எல்லா நாடுகளின் தெருக்களிலும் தமிழன் தலைநிமிர்ந்து நடக்க ஒரு முகவரி தேடிக்கொடுத்த தலைமையை விடுதலைப் புலிகள் பெற்றிருக்கிறார்கள்". இன்று அவர் எதைச் சொன்னாலும், அன்றே அவர் ஒப்புக்கொண்டிருந்தார் என்பதுதான் உண்மை. எட்டு ஆண்டுகட்கு முன் கதிர்காமருக்குத் தெரிந்த இந்த உண்மை இப்போது கூட சிலருக்குப் புரியாதது தான் புதிராக இருக்கிறது.

கடந்த தேர்தலில் தமிழர் ஒற்றுமை வலியுறுத்தப்பட்டது. புலிகளின் தலைமை தமிழர் தேசியத் தலைமை என்று ஏற்றுக்கொண்டுதான் பாராளுமன்றம் போனார்கள். அமரர் சிவசிதம்பரம்கூட "தேசியத் தலைவரின் காலடியில் அவர் தொண்டனாகவே பணியாற்ற விரும்புகிறேன்" என்றார். மக்களும் மகிழ்ந்து போனார்கள். அப்படியே அனுப்பியும் வைத்தார்கள். வந்ததன் பின்தான் சிலர் மாறிக் கொடிபிடிக்க ஆரம்பித்தார்கள். அயல்நாட்டின் எச்சில் இலைகளை நாடும் ஏவல் நாய்களாக மாறிப்போய் ஆட்சியாளர்களுக்கு ஆலவட்டம் தூக்க முனைந்தார்கள். அமரர் சிவசிதம்பரத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டே புலிகளின் ஏகப் பிரதிநிதித்துவத்தைக் கேள்விக்குறியாக்க முனைந்தமைதான் வேடிக்கையாள விடயமாயிற்று. தங்களுக்கும் ஒரு பலமுண்டு என்று இந்த முகவரி தெரியாத முண்டங்கள் புராணம்பாட ஆரம்பித்துள்ளன. முடிச்சுமாறிகளின் முகவரி என்ன என்பது மக்களுக்குத் தெரியாதா என்ன. கூலி வாங்கிக் கொண்டு காட்டிக் கொடுக்கும் கயமைத்தனம் ஒரு யோக்கியம் என்பது இவர்கள் வாதமாகிப் போகிறதா?

கூட்டணி குலைந்து போனது பற்றிய கூக்குரல் அர்த்தமற்றது. அந்தக் கூட்டணி எப்போதாவது கூட்டாக செயல்பட்டதுண்டா? இன்று முக்கியமானது கூட்டணியல்ல, கொள்கை பிடிப்புத்தான். குறிக்கோள் பற்றிய இறுக்கமான ஒற்றுமையான எண்ணம்தான். தமிழன் தலைவிதியை நிர்ணயிக்க அப்புக்காத்துகள் இப்போது தேவையில்லை. அடிவருடிகளும் தேவையில்லை. தொண்டர்கள்தான் தேவை. துணிவுள்ள-தெளிவுள்ள-திறமுள்ளவர்கள்தான் தேவை. நம் கொள்கையின் உறுதிப்பாட்டை உணர்ந்து தலைவன் வழியில் தடம்புரளாது நடப்பவர்கள் மாத்திரம் தான் வேண்டும். முதல் தடவையாக இப்போது தான் விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்தின் முன் நமக்காக ஒரு இடைக்கால வரைவை முன்வைத்திருக்கிறார்கள். அதில் மக்களின் இணக்கப்பாடு எந்தளவு என்றும் கேட்டிருக்கிறார்கள். நமது தீர்ப்பைச் சர்வதேச சமூகம் பார்க்கப் போகிறது. ஈழத் தமிழர்களின் தேவை என்ன என்பதை அவர்களுக்கு உணர்த்தியாக வேண்டும். ஒட்டுமொத்தமான நம் சம்மதம் மாத்திரமே நம் எதிர்காலத்தை உருவாக்க உதவும். இதன்பின் இன்னொரு சந்தர்ப்பம் என்றுமே கிடைக்கப்போவதில்லை. ஆகவே சலனம் வேண்டாம். தருணத்தைச் சரியானபடி பயன்படுத்திட வேண்டும். உதிரிகளை ஒதுக்கிவிட வேண்டும். உறுதியான ஒற்றுமையான தீர்வாக தேர்தலை எதிர்கொள்ளவேண்டும். சுதந்திர அறுவடைக்கான ஆயுதமாக இத்தேர்தலைப் பயன்படுத்தி வாக்குகளை ஒன்றுபட்டு அளிக்கத் தாயக மக்கள் தயக்கம்காட்ட மாட்டார்கள் என நம்புகிறோம்.

ஒன்றே குலம் - ஒருவனே தலைவன், அவன் வழி செல்வோம். ஆணையை மதிப்போம். 'ஏப்ரல்' நம்மை முட்டாள்களாக ஆக்கிவிடக்கூடாது.

– ஆசிரியர்

தமிழர்களே! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்!


முகவரி:
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி:
020 8480 3320

வெளியீடு:
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

பதிப்பாசிரியர்:
நா. சிவானந்தசோதி
Publisher:
N. Sivananthasothy

ஆசிரியர்:
அரவிந்தன்
Editor:
Aravinthan

வங்கி:
H.S.B.C.
A/C Name:
TAMILS' INFORMATION
SORT CODE: 40-35-30
A/C No.: 81437100

கணனி, அச்சுப்பதிப்பு:
வாசன் அச்சகம்
Computering & Printing:
Vasan Printers

£ 6.00 தபாற் செலவை மேற்படி வங்கியில் செலுத்தின் வருடம் முழுவதும் "தமிழர் தகவல்" உங்கள் இல்லம்தேடி வரும்.



படைப்புகள், ஆக்கியோரின் உரிமைகளே.



வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!

**பாதுகாப்பு ஒப்பந்தம்:-** "பெப்ரவரி மாதம் கைச்சாத்திடப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் மேலும் சில மாதங்கள் தாமதமாக்கப் பட்டிருக்கிறது. ஆனால் நீண்ட காலத்துக்கு இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகும் நிகழ்வைப் பிற்போடுவதற்கும் இந்தியா விரும்பவில்லை. இலங்கையில் நிலவும் பாதுகாப்புக் குறைபாட்டைக் காரணங்காட்டி இந்தியாவுக்கு எதிரான சக்திகள் இலங்கையில் காலூன்ற விடக்கூடாது என்பதில் அது கவனமாக இருக்கிறது. அமெரிக்கத் தலையீட்டைத் தவிர்த்துக் கொள்ளத்தான் இந்தியா இத்தகையதொரு உடன்பாட்டை இலங்கையுடன் செய்து கொள்வதற்கு இப்போது தயாராக உள்ளது. இவையெல்லாம் அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கையில் காலூன்ற மறைமுகமாக இருந்த போட்டியிலிருந்து வெளிப்படையான போட்டி நிலைக்கு வந்திருக்கின்றன என்பதற்கான வெளிப்பாடு. தென்னாசிய பிராந்தியத்தில் பெரும் பதற்ற நிலையை உருவாக்கும் அளவுக்கு விரைந்தாலும் ஆச்சரியப்படத் தக்கதல்ல." **- நன்றி: சுபத்திரா (ஈழமுரசு)**

**ராமராச்சியம்:-** "போலி மருந்துகளைத் தயார் செய்வதில் உலகத்தில் முதலிடம் வகிப்பது இந்தியா தான். கிட்டத்தட்ட முப்பத்தைந்து சதவீத அளவுக்கு இந்தியாவிலிருந்து போலி மருந்துகள் தயாராகி ஆபிரிக்கா, மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குக் கடத்திச் செல்லப்படுகின்றன. இந்தப் போலி மருந்துகளில் பதினாறு சதவீதம் உயிருக்கு கடும் ஆபத்தை விளைவிப்பவையாம். கர்நாடக லோக் ஆயுக்தா என்கிற அமைப்பு நடத்திய கணக்கெடுப்பின்படி 829 போலி மற்றும் தரம் குறைந்த மருந்துகள் வெற்றிகரமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றனவாம்." **- நன்றி: குமுதம் 02-02-2004**

**கொள்கைக்கான வாக்களிப்பு:-** "1952 சிங்கக் கொடியையும் 56ல் தனிச்சிங்களச் சட்டத்தையும் தமிழ் நிலப்பறிப்பையும், 58ல் எம்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப்படுகொலையையும், 62ல் வடகிழக்கெங்கும் எம்மீது சிறீலங்காப் படைகள் ஏவிவிடப்பட்டதையும், எமது இளைஞர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டதையும், வேலை வாய்ப்புகள் மறுக்கப்பட்டதையும், 77ல் எம்மீது இனப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்டதையும், எம்மவரை அல்லும் பகலும் துன்புறுத்தி பல்லாயிரக்கணக்கான எமது மக்களை சித்திரவதைக் கூடங்களில் அடைத்திட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் எம்மீது ஏவப்பட்டதையும், 83ல் எமது மக்கள் பயங்கரமான இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டதையும் சிறீலங்கா நாடாளுமன்றத்தில் வியத்தகு வகையில் ஆங்கிலம் பொறிபறக்கப் பேசிய எமது அந்நாள் தலைவர்களால் எந்த வகையிலாவது தடுத்திட முடிந்ததா? அவர்களுடைய அற்புதப் பேச்சுகளை சிறீலங்காப் பாராளுமன்றத்தில் கேட்டு சிங்களத் தலைவர்கள் மனந்திருந்தி, தமது பிழைகளை உணர்ந்து நடந்ததாக ஏதாவது வரலாறு உண்டா? இல்லவே இல்லை.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மிக அநீதியானது. உலகிலேயே மிக மோசமானதாகக் கருதப்படுகின்ற சட்டமிது என்றெல்லாம் நாம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்த சட்டவல்லுநர்கள் பக்குவமாகவும், நுட்பமாகவும் எடுத்துரைத்துப் பார்த்தார்கள். அசைந்தார்களா சிங்களத் தலைவர்கள்? இம்மியளவும் இல்லை.

நாடாளுமன்றப் பேச்சுகளால் அசைக்க முடியாத இந்தச் சட்டத்தை தற்காலிகமாகவேனும் நீக்க, சிங்களத் தலைவர்களைச் சம்மதிக்க வைத்தது எது? அடித்த அடி.

அன்றும் சொல்கிறேன், இன்றும் சொல்கிறேன். இன்று நீங்கள் அனுபவிக்கின்ற ஒவ்வொரு சிறு சிறு சுதந்திரமும் அடித்துப் பெற்றவையே அன்றி பேசிப் பெற்றவை அல்ல. இந்த உண்மையை உங்கள் உள்ளத்தில் தெளிவாக்கிக் கொண்டு வரப்போகும் சிறீலங்காவின் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களியுங்கள். நாம் இவ்வளவு போராட்டங்களுக்குப் பின்னரும் சில்லறைத்தனமாகப் பிளவுறாமல் ஒன்றுபட வேண்டும்." **-நன்றி: டி. சிவராம் (வீரகேசரி)**

**ஒருமுகம்:-** "மொத்தமாக 6577 கொலைகளுக்கும் அதன்பின் விஜயகுமாரதுங்காவின் கொலையின் முக்கிய சூத்திரதாரியான சோமவன்ச அமரசிங்க இலங்கை வந்துள்ளார். இவர்களுக்குப் பாவமன்னிப்பு அளிக்கப்பட்டு, பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மணியைக் கையில் ஏந்தியிருப்பது இலங்கையின் அரசியல் எவ்வளவு கீழ்நிலை அடைந்துள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இந்தக் கூட்டின் மூலம் தமிழன் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆட்சியமைப்பவர்களுக்குத் துணை போகாமல் பிரதேச வேறுபாடின்றி ஒரு அணியின் கீழ் திரண்டு இந்தப் பேரினவாதக் கூட்டை முறியடிக்கவேண்டும். அற்பசொற்ப உண்மைகளைப் புறந்தள்ளி வைத்ததின் பின் இனியாவது நாம் இணைவோம். தமிழன் பிரிந்தே இருந்துள்ளான் என்பதைப் பொய்யாக்கி ஈழத்தமிழன் ஒற்றுமையை உலகுக்குக் காட்டுவோம்." **- நன்றி: எஸ். ரமேஸ் (வீரகேசரி)**

**புலித்தேவன் பேட்டி:-** "சமாதான ஒப்பந்தம் எவ்விதத்திலும் மாற்றியமைக்கப்பட முடியாதது. அதில் திருத்தங்கள் எதுவும் இடம்பெறாது. இது பற்றி JVP யோ, விமல் வீரவன்சவோ சொல்வது என்ன என்பதில் அக்கறை தேவையில்லை. அவர்கள் இதைப்பற்றி விமர்சிக்கத் தக்கவர்களாக ஏற்றுக் கொள்ள எவ்விதத்திலும் தகுதியற்றவர்கள்."

**இது எப்படி?:-** "வட இலங்கையிலுள்ள முஸ்லிம்கள், இலங்கை முஸ்லிம் காங்கிரசை எம் தலைமைக்கு ஏற்றுக்கொண்டதில்லை. ரவூப் ஹக்கீம் எமது தலைவருமல்ல. நாம் தமிழீழத்தின் தேசியத் தலைவரையே எம் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளோம். இதில் எவ்வித கருத்து மாறுபாடுமில்லை."

**- யாழ் முஸ்லீம் சமாதான சபைத் தலைவர்**

### ஹரோவில்

**VENUS**
**FOOD & WINE**
தமிழ்க்கடை





*1, Centerl Pride,*
*Station Road,*
*Harrow HA1 2TW.*
*Tel: 020 8427 1270*

### வோல்த்தம்ஸ்ரோவில்

***Shree Jewellers***

வைரத்தாலிக்கொடிகள், சங்கிலிகள், காப்புகள், தோடுகள்,
மோதிரங்கள், நவரத்தினங்கள், நெக்லஸ்கள், மகரப்பதக்கங்கள்

**ஸ்ரீ ஜுவல்லர்ஸ்**

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்
சாத்திர விதிப்படி, பொருத்தமான நவரத்தினகற்கள் பதித்து
மோதிரம், பென்ரன், தோடு செய்து தரப்படும்.

***110, Hoe Street, Walthomstow,***
***London E17 4QS. Tel: 020 8509 7588***

### கவுன்ஸிலோவில்

*13 வருடங்களாக மக்களின் சேவையில் தென்கிழக்கு இலண்டன்*
*மக்களின் அபிமானம் பெற்ற ஸ்தாபனம்*
*இலண்டன் வாழ் தமிழர்களின் இதயங்களில் நீங்காத இடத்தில்*

**Best Foods**
**Super Market**

**364 - 366, Bath Road,**
**Hounslow, Middlesex TW4 7KT.**
**Tel: 020 8577 6002 Fax: 020 8570 2323**

### வோல்த்தம்ஸ்ரோவில்

***KUMARANS***
**குமரன்ஸ் *TEXTILES***

**136, Hoe Street,** Tel: 020 8521 3444
**Walthamstow,** 020 8530 3033
**London E17 4QR.** Fax: 020 8521 9444

### குறொய்டனில்

*13 வருடங்களாக மக்களின் சேவையில் தென்கிழக்கு இலண்டன்*
*மக்களின் அபிமானம் பெற்ற ஸ்தாபனம்*
*இலண்டன் வாழ் தமிழர்களின் இதயங்களில் நீங்காத இடத்தில்*

**Best Foods**
**Super Market**

**259 - 261, London Road,**
**West Croydon, Surrey CRO 2RL.**
**Tel: 020 8684 6269 Fax: 020 8686 4577**

### ஈஸ்ட்காமில்

***LAKSHMIS***
**JEWELLERS & SILK HOUSE**
***HOUSE OF FINE JEWELLERS***

**276, HIGH STREET NORTH,**
**EASTHAM E12 6SA.**
**Tel: 020 8470 5600**
**Fax: 020 8470 3448**

### வெம்பிளியில்

**ANGLO ASIAN**

**LONDON - COLOMBO** **COLOMBO - LONDON**

*Those willing to send parcels from Colombo to London and from London to Colombo by Air or by Sea are requested to contact us for such services at reduced Rates.*

**ANGLO ASIAN MINI MART**
***513, High Road, Wembley HA0 2DN***
Tel: 020 8900 2451 Fax: 020 8903 8202 Mob : 07956 425 707

**ANGLO ASIAN CASH & CARRY**
373, Church Lane, Kingsbury NW9 8JB
Tel: 020 8200 1555 Mob: 07956 425 707

**ANGLO ASIAN CASH & CARRY**
539, High Road, Wembley HA0 2DN
Tel: 020 8900 0444 Fax: 020 8900 9866
Mob: 07956 425 707 web: www.angloasiongroup.uk

### ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

**Prime Food & Wine**

*News Papers & Magazines - Off Licence - Grocery*
*Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables*

மணங்கவரும் மளிகைச்சாமான்கள்,
மென்பானங்கள், மதுபான வகைகள், பழங்கள்,
மரக்கறி வகைகள், மீன், இறைச்சி என
எல்லாவற்றிற்கும் குறைந்த விலையில் நிறைந்த
சேவையைப் பெற எம்மை நாடுங்கள்.



**118, Tooting High Street,**
**London SW17 0RR.**
**Tel: 020 8672 3777**

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க!**

## சின்னப் பறவை

- தா. பாலகணேசன்

சின்னப் பறவையே!
என்னோடு
நட்புக்கொள்ள வா!

என் அழைப்பை
அது கேட்காமலேயே
கொத்தித் திரிந்தது.

சின்னப் பறவையே!
உனக்கு,
ஒரு கவிதை பாடுகிறேன்
என் அருகில் வா!

அலகில் கொத்திய குச்சியை
திடீரென்று எறிந்துவிட்டு
கோபமாய் எழுந்து
மரக்கிளையில் ஆடியது.

விலங்கும்,
சிறையும்,
திட்டமும்,
செருக்கும்,
கண்ணியும்,
மிக்க கவிஞா!
நீ எனக்கு
கவிதை சொல்லித் தரவா
அழைக்கிறாய்!

இல்லைக் குருவி
மன்னித்துக் கொள்

உன் சிறக்கைகளையும்
உன் கூர் அலகையும்
உன் துடிப்பையும்
உன் பாட்டையும்
என் குழந்தைகளுக்காக
உன்னிடம் கேட்பதற்காகவே
அழைத்தேன்.

[நன்றி: கண்ணில் தெரியுது வானம்]

## துளி ஒன்று

மனிதருள்
பதுங்கி
மிருகம்
உறுமும்

அறிவியல்
விரல்களில்
நச்சு
நகம்
வளரும்

தேசம்
உறிஞ்ச
ராட்சச
முயற்சி

துளி
மண்
ஆயினும்
சுதந்திரம்
வேண்டும்.

- கவிஞர் அறிவுமதி

## ஒழுங்கு!

தலைமை எறும்பு கூறியது;
'ஒழுங்காகச் செல்லுங்கள்... பரிசு
உங்களுக்குக் காத்திருக்கிறது'
ஓர் எறும்பு -
'என் பாட்டில் நான் போவேன்...'
என்று வரிசையை உடைத்துக்
கொண்டு தனிவழி போனது.
கொஞ்ச நேரத்தில்-
வரிசை குலையாமல் போன எறும்பு
களெல்லாம் வாயில் அரிசியோடு
திரும்பி வந்தன.
ஒற்றை எறும்பின் முகம் ஒடுங்கியது.
நிரை குழம்பாத எறும்புகளில்
ஒன்று சொன்னது;
'வரிசை பிளப்பான்
பரிசை இழப்பான்'

[நன்றி: காசி ஆனந்தன் கதைகள்]

## மாதமிரு திருக்குறள் கற்போம்!

**"தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்."** - குறள் 268

*தன் உயிரைத் தானே தனக்கு முழு உரிமையாகப் பெற்றவனை ஏனைய நிலைபெற்ற உலக உயிர்கள் எல்லாம் தொழும். தனக்கு உரித் தாதல் - தன் கருமத்தைத் தவமாகச் செய்தல், தன் உயிர்ப்பண்புகளை வளர்த்துத்தான் முழுமை அடைதல். தன் ஆற்றல்களை முழுதும் வளர்த்துக்கொண்டு மேம்படுதலே, தன் உயிர்தான் அறப்பெறுதல்.*

**"கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு."** - குறள் 269

*துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுதலாகிய ஆற்றல் கைகூடியவர் களுக்கு கூற்றத்தை வெற்றி கொள்வதும் கைகூடும். ஊழையும் உட்பக்கம் காண்பதுபோல், கூற்றத்தையும் எதிர்நின்று போராடி வென்று மேற்செல்வர் என்பதாம்.*

## அட்டையின் விளக்கம்:

RMKV நிறுவனம், திருநெல்வேலியில் எண்பது ஆண்டுகால சேவையில் காஞ்சிபுரம் அசல் சேலைகள் உற்பத்தியிலும் சந்தைப்படுத்துதலிலும் பெயர் பெற்றிருக்கிறது. தற்போது சென்னை உஸ்மான் சாலையில் மாசி 5ந் திகதி தைப்பூசமன்று புதிய கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சொந்தத் தறியில் தனிமனித உழைப்பில் 20 நாட்களுக்குமேல் நெசவு செய்தே ஒரு சேலை உற்பத்தியாகின்றது என்பது பலருக்குத் தெரியாத விடயம். இதை நேரடியாகப் பார்த்தவர்கள் இலண்டனில் உள்ளனர். புதிய புதிய அமைப்புகளில் இச்சேலைகள் உற்பத்தி செய் யப்படுவதனால் அதற்கான சிறப்புப் பரிசில்களையும் அரசிடமிருந்து இந்நிறுவனம் பெற்றுள்ளது. அதைப் பற்றிய தகவல்களே இவை. நமது தமிழ்ப் பெண்கள் விருப்புடன் அணியும் உடையென்பதாலும் இச்சேலைகள் 24 ஆண் டுகள் பாவிக்கக்கூடிய தகைமை பெற்றவை என்பதாலுமே இத் தகவலைத் தருகிறோம். இது பணம் பெற்றுக் கொண்டு செய்யும் விளம்பரமல்ல. இங்குள்ள புடவை வியாபாரிகள் சிலர் எண்ணுவதுபோல் இது எந்த தனி நிறு வனத்திற்கும் சார்ந்த நிலைப்பாடுமல்ல. இது வெறும் தகவல் மாத்திரமே. அட்டையிலுள்ள சேலையின் விலை 45,000.00 இந்திய ரூபா (£500 பவுண்).

- ஆசிரியர்

# TASTE OF EELAM

THE FINE SRI LANKAN & INDIAN RESTAURANT

“அறுசுவைப் பதார்த்தங்கள் அனைத்தையும் உயர்தரமாய் வழங்கிடும் ஓர் உணவகம்”

406 - 408 Lewisham High Street
Lewisham, London SE13 6LJ

**Tel: 020 8690 3392 - 6902617**

**EELAM SHOP**

399 Lewisham High Street, Lewisham, London SE13 6NZ

**Tel: 020 8690 6545**

# HOTEL WESTEERN

Hotel Westeern (Pvt) Ltd
35, Frankfurt Place, Bambalapitiya, Colombo 4, Sri Lanka

**Tel: 0094 1 507161, 0094 1 507162, 0094 1 507163, 0094 74 518485**
**Fax: 0094 74 518481**

**Ready to accommodate you......**
**...at the Sun kissed Beach of Srilanka**

**30 Guest Rooms, 5 Luxurious Suites**
**Restaurant & Party Hall**
**Conference hall**

**HOTEL WESTEERN**

**Situated at the Heart of Colombo City**

**E-mail: infor@hotelwesteern.com**
**Web: www.hotelwesteern.com**

Approved by the Ceylon Tourist Board

தமிழர் தகவலுக்காக தென்கச்சி அவர்களால் வழங்கப்பட்டது.

மாதம் ஒரு தகவல்

# நமக்குத் தெரியவில்லை!

- தென்கச்சி சுவாமிநாதன்

"ஒரு உயரமான மரம்.

அந்த மரத்தின் உச்சியிலே ஒரு பறவை கூடு கட்டியிருந்தது. அது என்ன பறவைன்னா... ராஜாளிப்பறவை! அந்தக் கூட்டிலே அது முட்டை இட்டிருந்தது.

ஒரு குரங்கு அந்த மரத்துக் கிளையிலே தாவித் தாவிக் குதித்துக் கொண்டிருந்தது. அப்போ அந்தக் கூட்டிலே இருந்த முட்டை அது கண்ணுலே பட்டுது... சும்மா இருக்குமா? விளையாட்டா ஒரு முட்டையை எடுத்தது.

மரத்தை விட்டுக் கீழே இறங்கிச்சு. கீழே ஒரு குப்பை மேட்டிலே ஒரு கோழி சில முட்டைகளை இட்டு வச்சி ருந்தது. குரங்கு, தன் கையிலே இருந்த ராஜாளிப் பறவை முட்டையை அந்தக் கோழி முட்டைகளோடு போட்டுட்டுப் போயிட்டுது.

கோழி வந்துது... பார்த்துது... அதுக்கு ஒண்ணும் வித்தியாசம் தெரியவில்லை...! தன்னுடைய முட்டைகளோடு சேர்த்து அந்த முட்டையையும் அடை காத்துது!

கொஞ்ச நாள்லே குஞ்சுகள் பொரிச்சுது... எல்லாம் முட்டையிலிருந்து வெளிவந்தன.

ராஜாளிப் பறவையோட குஞ்சு... அந்தக் கோழிக் குஞ்சுகளோடவே சேர்ந்து வளர்ந்தது.

மற்றக் கோழிக் குஞ்சுகள் போலவே இதுவும் குப்பையைக் கிளறிச்சு... புழு பூச்சிகளைச் சாப்பிட்டுது...!

காக்கைகள் தாக்கறதுக்கு வந்தா... மற்றக் கோழிக் குஞ்சுகள் போலவே இதுவும் பயந்து போய் தாய்க் கோழி யின் சிறகுகளுக்குள்ளே வந்து ஒளிஞ்சிருக்கும்.

இப்படிக் கொஞ்சக் காலம் போச்சு. குஞ்சுகளெல்லாம் வளர்ந்து பெரிசா ஆயிட்டுதுகள்.

சிலது சேவல்களா ஆச்சு! சிலது கோழிகளா ஆச்சு. அந்த ஒண்ணு மட்டும் ராஜாளியா ஆச்சு. ஆனா ஒரு விஷயம்...

தான் ஒரு ராஜாளிங்கிறது அந்தப் பறவைக்குத் தெரியாது. தன்னையும் ஒரு கோழின்னே அது நினைச்சுக்கிட்டிருக்கு! அப்படி நினைச்சுக்கிட்டு குப்பை மேட்டைக் கிளறிக்கிட்டிருக்கு!

ஒருநாள் சாயந்திர நேரம். இந்த ராஜாளிப் பறவை கீழே அதுபாட்டுக்கு வழக்கம் போல குப்பைகளை கிளறிக்கிட்டிருக்கு.

அப்போ அண்ணாந்து பாக்குது... வானத்திலே... உயரத்திலே... கூட்டமா ராஜாளிப் பறவைகள் உல்லாசமா வட்டமடிச்சுப் பறந்துகிட்டிருக்கு... அதை இது பாக்குது... இதுக்கு மனசுக்குள்ளே ஏக்கமா போச்சாம். அப்போ இதுக்கு ஆண்டவன் பேரிலே கோபம் வந்ததாம். "ஆண்டவனுக்கு என்மேலே ஏன் இந்த ஓரவஞ்சனை? என்னையும் ஒரு ராஜாளியா படைச்சிருந்தா... நானும் கூட இந்த நேரம் ஆகாயத்திலே உல்லாசமாகப் பறந்துகிட்டிருப்பேனே"ன்னு நினைத்து வருத்தப்பட்டதாம். இது வேடிக்கையா இருக்கில்லே!

ஒருவகையில் பார்த்தா, நாம் கூட இந்த ராஜாளிப் பறவை மாதிரித்தான். நம்மாலே எவ்வளவு வேலை செய்ய முடியும்ன்னு நாம் நினைச்சிக்கிட்டிருக்கோமோ அதைவிடப் பலமடங்கு நம்மாலே வேலை செய்ய முடியும்... பல மடங்கு வேகமாகவும் செய்ய முடியும்.

நம்முடைய முழுமையான பலம் என்னங்கறது நமக்கே தெரியறதில்லை.

ஆண்டவன் மேல் குற்றங் காணலாமா?


## 'சிவயோகம்' செய்தி!

திருக்குறள் - தெய்வப் புலவரின் உண்மைப் புதையல். இரண்டு பாகங்களாக அரிய ஆங்கில - தமிழ் உரை யுடன் வெளிவந்துள்ளது. 1310 பக்கங்களில் அழகுற அச்சிடப்பட்டுள்ள இந்நூல் (இரண்டும்) £6.00 பவுண் களுக்கே விலையிட்டுள்ளோம். பலரும் பயன்பெற வேண்டிய இப்பணிக்கு இலாப நோக்கமெதுவும் இல்லை.

தொடர்பு கொள்க:- சிவயோகம் 180–186, Upper Tooting Road, Tooting SW17 7EJ. Tel: 020 8767 9881


## பேராசிரியர் 'அறிவொளி' இலண்டன் வருகை!

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் பேராசிரியர் அறிவொளியின் இலண்டன் வருகை இடம்பெறு கிறது. தங்கள் சாதகங்களின் துணைகொண்டு பலன்களைக் கண்டறிய விரும்புபவர்கள் மட்டும் முன்கூட்டியே தொடர்புகொள்க. குறிப்பிட்ட சிலநாட்கள் தங்கியிருப்பதால் முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுங்கள்.

மேலதிக விபரங்கட்கு:- தமிழர் தகவல், தொ.பே: 020 8480 3320

# M.K. Sri & Co

**Solicitors & Administrators of Oaths**

**We Specialise in**
**Crime**
**Immigration**
**Matrimonial**
**Conveyancing**
**State Benefits**
**Traffic Offenses**
**Advice &Assistance at Police Station**

**Principal: M.K. Sritharan**

**Assistant Solicitors**
**S. Ravindran**
**S. Sivasanthiran**
**V. Ratnam**

**Trainee Solicitors**
**Avtar Manku**
**Selvi Ravindran**

**Legal Aid Work Undertaken**

**We are Faanchised by the Legal Services Commission**

**Te l: 020 8515 7000 (4 lines)**
**Fax : 020 8515 7030**
**Fax : 020 8515 7031 (For Conveyancing only)**

**2 C, FAIRHOLME ROAD**
**(OFF STATION ROAD)**
**HARROW, MIDDLESEX HA1 2TN**

**DX: 4232 Harrow (1) www.mksri.co.uk**


# தெய்வீகக் கருணை !

*(மகாகவி பாரதியார் ஆற்றிய முதற் சொற்பொழிவிலிருந்து)*

ஏழைகள், நாதனற்றிருப்போர் இவர்களின்மீது செலுத்துவது மானுடக் கருணை! உனக்குத் தீங்கு செய்வோர், உன் மனதைப் புண்படுத்துவோர், உன் பொருளை அழிப்போர், உன்னை நிந்திப்போர் - இவர்கள் மீது செலுத்தப்படும் கருணை தெய்வீகக் கருணை. இது சாதாரண மனிதர்களிடம் இராது. எல்லா மனிதர்களிடமும் இவ்விதக் கருணை இருக்குமாயின் உலகத்துக்குக் கேடே விளையுமென்று சிலர் சொல்வார்கள். ஆனால் இவர்கள் சொல்வது வெறுங்கதை. கோடி ஜனங்களில் ஒரு மகாத்மாவுக்குக்கூட இல்லாத இப்பெருங்குணம் உலகமெங்கும் பரவின், அதிகக் கெடுதியுண்டாய் விடுமென்று இவர்கள் அஞ்சுவது அநாவசியமாயிருக்கின்றது. தவிர வும் அந்தக் கருத்தே பிழைபட்டது. தெய்வீகக் கருணையுடைமையினால் உடையோனுக்கே சில தீங்குகள் விளையுமல்லாது உலகத்துக்கு நன்மை தான் உண்டாகும்.

இது சொல்லிவரக் கூடியதன்று. இயற்கையாக வரவேண்டியது. புஷ்பத்தில் தேனும், சூரியனில் பிரகாசமும், குயில் வாயில் செவியுருக்கும் இசையும் எவ்வாறு இயற்கையாக அமைந்திருக்கிறதோ அது போலவே மகான்கள் சிலரிடம் கருணைக் குணம் இயல்பிலே அமைந்துள்ளது. ஸ்ரீ புத்தர், ஸ்ரீ கிறிஸ்தர் முதலிய புண்ணிய புருஷர்களெல்லாம் இப்பெருங் குணம் வாய்ந்தோர்கள். அவர்களுக்கு ஒருவர் சொல்லிக் கொடுத்து வந்ததன்று. அவர்களின் தெய்வீகக் கருணையைப் பார்த்துவிட்டு அக்காலத்து ஜனங்கள் 'இவர்கள் மனிதர்களல்லர், தெய்வங்கள்' என்றே கருதினர். இக்காலத்திலும் எத்தனையோ ஜனங்கள் அவ்வாறே நினைக்கின்றார்கள். ஆம், இவர்கள் தெய்வீக இயற்கையுடையோர் என்பதில் என்ன ஆட்சேபமிருக்கின்றது. கடவுள் ஒருவன் இருப்பானேயாயின் அவன் இம்மகான்களுடைய தன்மை கொண்டே இருத்தல் வேண்டும்.

கிறிஸ்துவுக்கு முள்முடி தரித்துச் சிலுவையிலேற்றி அங்கந்தோறும் ஆணியறைந்து, மேலெல்லாம் காறியுமிழும்போது அவர் "எனது பிதாவே! இவர் அறியாது செய்கின்றார்கள். இவர்களை மன்னித்தருளும்" என்று சொல்லிவிட்டு இறந்து போயினர். ஸ்ரீ புத்தருடைய கருணை கடலுக்கே ஒப்பாகும். "உன்னைத் தீண்டும் அரவையும் சொல்லாதே" என்பது இம்மகான் வாக்கியம்.

உனக்கு தீயன செய்து வருவோனுக்கு நீ நல்லன செய்துவா; நீ உடனே மகானாகி விடுகிறாய்; உடனே தெய்வமாகிவிடுகிறாய். என்னால் வருணிக்க முடியாததும் எனது வணக்கத்துக்குரியதுமான பொருளாய் விடுகிறாய். ■

# SAI WINGS

Residental Sales, Lettings, Mortgages, Personal & Business Loans, Life & Building Insurance

தரமான சேவைக்கும் - விரைவான பெறுபேறுகட்கும் முதன்மை நிறுவனம்.
தமிழ், சிங்களம், ஆங்கிலம் எம்மொழியிலாயினும் பேசவும்,
தொடர்புகொள்ளவும், முடிவு காணவும் இன்றே நாடுங்கள்.

**77, RICHFORD WAY, MITCHAM, SURREY CRO 3AJ, U.K.**

**Tel/Fax: 020 8771 5928 Mob: 07903 525 965**

**Website: www.saiwings.com E-mail: admin@saiwings.com**

**TOOTING TOURS & TRAVELS**
**217, Tooting High Street**

*Contact:* **N. Vivekanandan**
***Independant Financial Advisor***



# LinkAIR

**Travels Limited**

5047 ATOL PROTECTED

IATA 91-2 57040

SriLankan

**Special Fares To :**
**Colombo**
**Madras**
**Singapore**
**Canada**

**We can also arange : COLOMBO - JAFFNA - COLOMBO**

**361 London Road, Croydon, Surrey CR0 3PB**
**Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579**

# எங்கள் ஊர்

– நாக. சிறீகெங்காதரன்

## தெல்லிப்பளை – கிராமங்களில் ஒரு மகுடம்

**த**மிழர் தகவல் சஞ்சிகையில் கிராமங்களைப் பற்றி ஒரு தொடர் வருகின்றது. நாம் பிறந்த மண்ணில் பல்வேறு கிராமங்களைப் பற்றி அந்தக் கிராமங்களில் பிறந்து பெருமை கொள்கின்ற பல நண்பர்கள் எழுதும் கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. நான் பிறந்து இருபத்தைந்து ஆண்டுகள் இளமைக் கனவுடன் வாழ்ந்த என்னுடைய கிராமத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதவேண்டும் என்கின்ற எண்ணம் காலத்துக்குக் காலம் என்னுள் துளிர்விட்டாலும் நிறைவுபெறவில்லை. தெல்லிப்பளையை விட்டு நான் புலம்பெயர்ந்து ஏறக்குறைய இருபத்தொன்பது ஆண்டுகள் ஆகிவிட்டாலும் எனக்குள்ள, தொடர்ந்த தொடர்புகளினால் கிடைத்த தகவல்களைக் கொண்டு இக்கட்டுரையை எழுதுகின்றேன். குறிப்பாக இந்தக் கட்டுரையில் வருகின்ற கிராமத்திற்குப் பெருமை சேர்ப்பவர்களின் பட்டியல் பூரணமானதல்ல. எதிர்காலத்தில் பூரணப்படுத்தப்பட்டு முழுமையானதாக்கப்பட வேண்டும் என்கின்ற குறிப்போடு இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

தெல்லிப்பளை, கிராமங்களுக்கேயுரிய எல்லாத் தன்மைகளையும் கொண்டிருந்தாலும் ஒரு வளர்ச்சி பெற்ற நகருக்குரிய தன்மைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. விவசாயிகளையும் தொழிலாளர்களையும் பெருமளவில் கொண்டிருந்த கிராமம் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின் புத்தியீவிகளையும் பெருமளவில் உற்பத்தி செய்த மண்ணாகவும் விளங்கியது.

தெல்லிப்பளை மிக அதிக அளவில் இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கொண்டிருந்த கிராமமாக விளங்குகின்றது. இலங்கையின் அரசியல் வரலாறு முழுமையாக எழுதப்படும்போது தமிழினத்தின் தேசிய அரசியல் நீரோட்டத்திற்கு மாறான கருத்துக்களை – குறிப்பாக இடதுசாரி கருத்துக்களைக் கொண்டிருந்த கிராமமும் எமது கிராமமே.

தெல்லிப்பளை என்கின்ற கிராமம் மிகப் பெரியது. துர்க்கை அம்மன் கோவிலடியிலிருந்து தொடங்கி, பலாலி போகும் வழியில் உள்ள அரசினர் வைத்தியசாலை, மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், சீமேந்துத் தொழிற்சாலையின் தெற்குப் பகுதி, கீரிமலைக் கடற்கரை, கவுணாவத்தை வைரவர் ஆலயம், மயிலங்கூடல் வைரவர் ஆலயம், பன்னாலை வறுத்தலைப் பிள்ளையார் ஆலயம் ஆகிய எல்லைகளை உள்ளடக்கிய தெல்லிப்பளை, மாவிட்டபுரம், கீரிமலை, மயிலங்கூடல், கொல்லங்கலட்டி, பன்னாலை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது.

### ஆலயங்கள்

இலங்கை முழுமைக்கும் பெருமைசேர்க்கும் மூன்று பெரிய ஆலயங்களும் வருடாந்த திருவிழாக்கள் இடம்பெறுகின்ற பல சிறிய கோயில்களும் எமது கிராமத்தை அலங்கரிக்கின்றன. மிருகபலிக்குப் பெயர்பெற்ற கவுணாவத்தை வைரவர் ஆலயமும், மிருகபலி இடம்பெற்ற வேளையில் நரசிம்ம வைரவராகவும் அவைகள் நிறுத்தப்பட்ட பின்பாக ஞானவைரவராகவும் புதிய அவதாரம் பூண்ட பத்துக்கும் மேற்பட்ட காவல்தெய்வத்தின் ஆலயங்களும் இக்கிராமத்தை அலங்கரிக்கின்றன.

### மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயம்

தெல்லிப்பளையின் ஒரு எல்லையில் அமைந்துள்ள இந்தச் சரித்திரப் புகழ்மிக்க ஆலயம் இலங்கையின் மிகப்பெரியதும் தொன்மையானதுமான ஆலயமாகும். மாருதப்புரவீகவல்லி என்கின்ற இராஜகுமாரிக்கு ஏற்பட்ட நோயின் காரணமாக அழகான முகம் குதிரை முகமாக மாறியது. அந்த அரசகுமாரி கீரிமலையில் நன்னீரும் உவர்நீரும் கலக்குமிடத்தில் நீராடிவிட்டு வந்து மாவிட்டபுரத்தில் முருகவழிபாடு செய்து குதிரைமுகம் மாறப்பெற்றார் என்கின்றது வரலாறு. குதிரைமுகம் மாறிய காரணத்தால் அந்த இடத்திற்கு மாவிட்டபுரம் என்ற பெயர் வந்ததாக கோயில் வரலாறு கூறுகின்றது. (மா – குதிரை விட்டபுரம்)

தந்தையர்களை இழந்தவர்கள் அவர்களை நினைத்துக் கடமைசெய்யும் நாள் ஆடி அமாவாசை தினமாகும். இந்தத் தினத்தை தீர்த்தத் தினமாகக் கொண்டு இருபத்தைந்து நாட்கள் திருவிழாக்கள் இங்கு நடைபெறுகின்றன. திருவிழாக்கள் எல்லாம் மிக நல்ல முறையில் நடைபெற்றாலும் தேர்த் திருவிழாவின்போது ஐந்து தேர்களில் முறையே விநாயகர், வள்ளி தெய்வானை சகிதம் அருள் முருகன், பார்வதி சகிதம் சிவன், ஆறுமுகசாமி, சண்டேசுவரர் எனத் தெய்வங்கள் பவனிவரும் காட்சி அற்புதமானது. இந்தக் காட்சியை இங்கே பிறந்து வளருகின்ற எமது அடுத்த சந்ததிகளிற்கு அவசியம் காட்ட வேண்டும். கிராமப்புறங்களுக்கே உரிய புனிதம், பண்பு, பக்தி, அழகு ஆகியவைகளை எமது புலம்பெயர்வாழ் பிள்ளைகள் அவசியம் பார்த்து அறிந்திருக்க வேண்டும். கடைசி ஆறு – ஏழு நாட்கள் இடம்பெறும் திருவிழாக்காலத்தின் மாலை வேளைகளின் போது இளம் பெண் பிள்ளைகள் அழகான உடையுடுத்தி ஒய்யாரமாக வரும் காட்சி அற்புதமானது. இவற்றைப் பார்ப்பதற்காகவே இளைஞர்கள் தங்கள் நேரங்களை ஒதுக்கி சுவாமி தரிசனம் செய்யும் காட்சியும் அழகானதுதான். மாவிட்டபுரம் கந்தன், ஆடி அமாவாசையின் போது கீரிமலைக்கு தீர்த்தமாடிச் சென்று இரவு அற்புதமான சோடனை

களுடனும் வெளிச்சங்களுடனும் (Light) திரும்பி வரும் காட்சி பார்க்கக் கண்கொள்ளாதது.

இதேபோன்று இதன் பின்னான இரண்டாம் நாள் கப்பற் பயணம் செய்வதற்காக (கப்பல் திருவிழா) காங்கேசன்துறை கடற்கரை சென்று, பாக்கு நீரிணையில் சிலமணிநேரம் பவனிவரும் காட்சியும் மிக மிக அழகானதே.

நவராத்திரி பண்டிகையின் இறுதிநாளான மானம்பூவின்போது (வாழை வெட்டு) மாவிட்டபுரத்திலிருந்து கந்தன் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் சென்று அங்கே வாழையை வெட்டிவிட்டு மீண்டும் இரவு அழகாக கோயிலுக்குத் திரும்பும் காட்சியும் கண்கொள்ளாதது.

இக்கோயில் உள்வீதி, இரண்டாம் வீதி, வெளி வீதி என மூன்று வீதிகளைக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் உள்ள கோயில்களில் மிகப்பெரிய வெளிவீதி உள்ள கோயில் இதுதான். மேற்கு வீதியில் மிகப்பெரிய கோபுரத்தையும் நாம் இங்கே தரிசிக்கலாம். தந்தையின் வழியைப் பின்பற்றி பிரம்மஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் தற்போது பொறுப்பாக நடாத்திக் கொண்டு வருகின்றார். மீண்டும் கும்பாபிஷேகம் நடந்து திருவிழாக்கள் நடைபெறும்வரை வேறு எங்குமே செல்வதில்லை என்ற கொள்கையுடன் பூசைகளையும் திருப்பணிகளையும் கவனித்துக்கொண்டு வருகின்றார்.

இவ்வளவு பெருமையும் முக்கியத்துவமும் தெய்வீகமும் கூடிய இக்கோயிலுக்கு ஒரு கறைபடிந்த வரலாறும் உண்டென்பது பதியப்படவேண்டியது தான். அறுபதுகளின் பிற்பகுதியில் தொடங்கிய சாதிப் போராட்டத்தின் பிரதான அங்கமான "ஆலயப் பிரவேசப் போராட்டத்தின்" உச்சம் இங்கே தான் இடம்பெற்றது. காலஞ்சென்ற எஸ்.ரி. நாகரத்தினம் (STN) தலைமையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நடத்திய இப்போராட்டம் நான்கு ஆண்டுகள் தொடர்ந்து நடந்ததுடன் இரத்தக்களறி நிறைந்ததாகவும் இடம்பெற்று *1970ல்* வெற்றிகரமாக முடிவடைந்தது. *1970ம்* ஆண்டுத் திருவிழாவின் பின் எந்தவித வேறுபாடுகளும் இல்லாமல் சகலரும் கடவுள் தரிசனம் செய்யலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டது. இந்தக் கறைபடிந்த போராட்டத்தின் போது ஒரு தமிழ்த் தலைவர் தான் கோயிலின் உள்ளே பக்தர்கள் எல்லோரும் செல்வதைத் தடுத்து நிறுத்தும் நிகழ்விற்குத் தலைமை தாங்கினார். முன்னாள் வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் விளங்கிய திரு. சுந்தரலிங்கம் அவர்கள்தான் இந்த வரலாற்றுக் கொடுமைக்கு முக்கியமான காரணகர்த்தராகும்.

இன்று போரின் அழிவின் பின்னரும் ஜனாதிபதியின் உதவியுடன் புனருத்தாரண வேலைகள் நடந்துகொண்டும் பூசைகள் ஒழுங்காக இடம்பெற்றாலும் கூட உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள காரணத்தினால் மீண்டும் பழைய பொலிவுகாண எவ்வளவு காலமாகுமோ தெரியாது.

- (இன்னும் வரும்)


வோல்த்தம்ஸ்ரோவில்

PRABAS பிரபாஸ்

தமிழ்க்கடை




156-158, Forest Road, Walthamstow,
London E17 6JQ.
Tel/Fax: 020 8509 3322

மாணவர் பக்கம்:

# தாஜ்மஹால்

– நிஷானி ஜெயபாலன்
(திருவள்ளுவர் தமிழ் பாடசாலை)



உலகத்தில் உள்ளவர்கள், மாணவர் மாணவிகள் எல்லோரும் அதிசயமாக பேசிக் கொள்ளவும், அறிந்துகொள்ளவும், பார்க்க விரும்புவதும், புகழ் பெற்ற தாஜ்மஹால் கட்டிடத்தைப் பற்றியே. காதல் (Love) என்கிற மூன்று எழுத்துக்கள் உலகம் எங்கும் உள்ள கோடிக் கணக்கான, காதல் ஜோடிகளின் எண்ணங்களைப் பிரதிபலிப்பன. காதல் உன்னதமானது என்று கவிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். உலகத்திலே கற்பனையை உருவாக்குபவர்களும் கவிஞர்களே. காதல் பெற்றவர்களுக்கு உபத்திரம் விளைவிப்பது, ஆனால் காதலிப்பவர் களுக்கு ஒரு சொர்க்கம் எனலாம். சுருக்கமாகக் கூறினால் காதல் என்பது இரண்டு மனங்கள் இணைவதற்கான ஓர் ஒப்பந்தம்.

உண்மையான காதல் எல்லாம் அம்பிகாவதி – அமராவதி, லைலா – மஜ்னு, , ரோமியோ – ஜூலியட் காலத்தோடு மறைந்து விட்டன. ஷாஜஹானின் மனைவி மும்தாஜ் இறந்தபின், அவளின் ஞாபகார்த்தமாகக் கட்டிய கட்டிடமே தாஜ்மஹால். இக்கட்டிடத்தை இந்தியாவின் ஆக்ராவில் யமுனா நதிக்கரையில் 1652ம் ஆண்டு, பெர்ஷியா நாட்டுக் கலைநிபுணர்கள் கட்டினார்கள். இதைக் கட்டி முடிக்க இருபதினாயிரம் தொழிலாளர்கள் இருபத்திரண்டு வருஷங்கள் எடுத்துள்ளனர். இக்கட்டிடம் அமைந்துள்ள இடம் யமுனா நதிக்கரையாகும். யமுனா நதிக்கரையில் தாஜ்மஹால் கட்டப்பட்டதைப் பார்வையாளர்கள் கண்டு பரவசப்ப டுவர். யமுனா நதியும் ஓர் அதிசயமான நதியாகும். உலகத்தில் உள்ள நதிகள் எல்லாம் ஒரு கடலில் போய் கலந் துவிடும். ஆனால் யமுனாநதி மட்டும் தரைப்பகுதியிலேயே பாய்ந்து தன் பயணத்தை முடித்துக் கொள்கிறது.

இக்கட்டிடம் 580 மீட்டர் நீளம், 305 மீட்டர் அகலம் கொண்டது. தாஜ்மஹால் உயரத்திலும், அகலத்திலும் மிகப்பெரிய கட்டடம் என்று அப்போது பேசப்பட்டது. உறுதிவாய்ந்த பளிங்குக் கட்டிடம். அழகாயும், கம்பீரமாயும் இன்று மிளிர்கின்றது. இந்தக் கட்டிடம் முழுக்க முழுக்க சலவைக் கற்களால் (Makrana Marble) கட்டப்பட்டது. இந்த வெண்மை சலவைக் கற்களில் சந்திரனதும், சூரியனதும் ஒளி பட்டால், கற்களின் வெண்மை ஒளி 10 மடங்காய் பிரகாசிக்கும். ஆதலால் இந்த தாஜ்மஹால் கட்டிடத்தை வெளியே நின்றபடியே பார்த்துவிடலாம். இக்கட்டிடத்தைப் பார்வையிட இந்தியருக்குக் குறைந்த விலையில் நுழைவுச் சீட்டும், வெளிநாட்டவர்களுக்குக் கூடிய விலையிலும் கட்டணம் அறவிடப்படுகின்றது.

## திருக்குறளுக்கான ஒரு மனனப் போட்டி!



திருக்குறள் ஒரு பொதுமறை, நம் இனத்தின் – மொழியின் பொக்கிசம். இதைப் படித் துணர்வதால் நம்மினத்தில் இன்று அருகிப்போயுள்ள நன்றி உணர்வு மேலோங்க வேண்டும் என்பது "தமிழர் தகவல்"இன் தணியாத ஆசையாகும். அதற்கான முதல் முயற்சி இது. கீழே தரப்படும் அதிகாரங்கள் பத்தும் மனனம் செய்யப்பட்டு ஒப்புவிக்கப்படல் வேண்டும். அவை யாவன: 1. கடவுள் வாழ்த்து, 6. வாழ்க்கைத்துணைநலம், 9. விருந்தோம்பல், 10. இனியவை கூறல், 11. செய்நன்றி அறிதல், 14. ஒழுக்கமுடைமை, 15. பிறன்இல் விழையாமை, 23. ஈகை, 30. வாய்மை, 32. இன்னா செய்யாமை. இதன் நேரடிப் பரீட்சை உங்களுக்கு வசதியான ஒரு இடத்தில் நடை பெறும். நீங்கள் தயாராக உள்ளபோது "தமிழர் தகவலுடன்" தொடர்பு கொள்ளலாம். வெற்றி பெற்றவர்களுக்கு £100 பவுண்கள் பரிசளிக்கப்படும். வயது எல்லை ஆறு தொடக்கம் இருபது வரை ஆகும். இதேவகையில் ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறள்களும் பாடமாக்கி ஒப்புவிக்கப்படுமாயின் £1000 பவுண்கள் ஒரேமுறையில் பரிசாக வழங்கப்படும். பிரபலமான நிறுவனமொன்று இதற்கான பரிசினை வழங்க முன்வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் கால எல்லை 31-07-2004 ஆகும்.

– ஆசிரியர்

**தாயக ஆர்வலர்களுக்கு:–** தாயகத்தில் இயங்கும் பொதுநிறுவனங்களுக்கு–அநாதர் அமைப்புக்களுக்கு–மற்றும் நலிவுற்றோர் நலன்புரி நிலையங்களுக்காக நிதியுதவி செய்ய விரும்பும் நல்லெண்ணம் கொண்டோர் எம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் அனுப்பும் நிதியுதவிக்கான பற்றுச்சீட்டு எம்மால் உடன் வழங்கப்படும். அதன்பின் உரிய நிறுவனத்திடம் அந்நிதி சேர்ந்ததற்கான அவர்களது சொந்தப் பற்றுச்சீட்டும் பெற்றுக் கொடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

விபரங்கட்கு: "சிவயோகம்" 180–186, Tooting, London. Tel: 020 8767 5277, 020 8767 9881

சிவமயம்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!

# ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்

(5, Chapel Road, West Ealing, London W13 9AE. தொலைபேசி: 020 8810 0835)

# சைவ சித்தாந்தத் தமிழ் வகுப்பு

*(08-03-1998 இலிருந்து நடைபெறுகின்ற இலவச வகுப்பு)*

**வெள்ளம் வருமுன்பே அணை கட்டப்பட வேண்டும். நாம் வந்த பின்னராவது கட்டுவோம்!**

**இடம்:** அருள்மிகு ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோயில்

**காலம்:** பாடசாலை விடுமுறைகள் தவிர்ந்த எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 4.00 மணி தொடக்கம் 5.30 மணிவரை (தொடர்ந்து 15 நிமிடம் வழிபாடு)

**வயது:** நான்கு வயதிற்கு மேற்பட்டவர்கள். தமிழறியாதார்க்குத் தமிழ் கற்பிக்கப்படும்.

**மொழி:** இலகு தமிழ் (தேவைக்கேற்ப ஆங்கிலம் பயன்படுத்தப்படும்.)

**கற்பிப்போர்:** திரு. க. இராஜமனோகரன் (தொலைபேசி 07931 531 305)
திரு. நா. நித்தியானந்தன்
திருமதி. ச. இராஜமனோகரன்

எம்மிலே பலரும் சமய அறிவைத் தேவைப்படாத ஒன்றாகக் கருதலாம். ஏன், விருப்பமில்லாத ஒன்றாகக் கூட எண்ணலாம். ஆனால், அவ்வறிவைப் பிள்ளைகளுக்குச் சரியான முறையிலே கற்பிக்கவேண்டியது பெற்றோராகிய எமது கடமை! எம்மிடமிருந்து சமய அறிவை எதிர்பார்ப்பது அவர்களின் பிறப்புரிமை! சமயத்தைச் சரியா? பிழையா? என்ற முடிவினை எடுப்பதை அவர்களிடம் விட்டுவிடுவோம். அது ஒவ்வொருவரின் ஆன்மீக உரிமை!

மேலும், நாம் எவ்வளவு முயன்றாலும் விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறினாலும் கடவுள் நம்பிக்கை இருந்தே தீரும். எனவே, அதனைக் கற்காது மூடநம்பிக்கைகளை வளர்ப்பதிலும் பார்க்கக் கற்றுத் தெளிவது எச்சமயத்தவர்க்கும் நன்மை தருவதாகும்.

காலம் இன்னும் கடந்துவிடவில்லை. இப்போதும் இணையலாம்!


*மிச்சத்தில்*

# கிறேஸ் களஞ்சியம்

# GRACE

ஈழமக்களின் அதிமுக்கிய உணவுகளான அரிசி, அரிசிமா, மீன், றால், நண்டு எல்லாம் மிகவும் மலிவு விற்பனையில்

***36-37, Monarch Parade, London Road, Mitcham CR4 3HA, Surrey.***

**Tel: 020 8648 0319**

*Open 7 a.m - 11 p.m*

# உலுகா !

ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள ஒரு காட்டில் இரண்டு மலை ஜாதி இனத்தவர் வாழ்ந்து வந்தனர். ஒரு கூட்டத்தின் தலைவன் உலுகா. மற்ற கூட்டத்தின் தலைவன் ஒகாயா. இந்த இரு கூட்டத்தினரிடையே கடும்பகை நிலவியது. உலுகாவின் கூட்டத்தில் ஆட்கள் குறைவாக இருந்த போதிலும்கூட ஒகாயாவின் கூட்டத்தைவிடச் சக்தி வாய்ந்ததாக இருந்தன. உலுகாவின் கை எப்பவும் ஓங்கி இருந்தது.

இதற்குக் காரணம் உலுகா தயாரித்து வந்த ஒரு வகை வலி நிவாரணமைதான். அவன் அதனை எடுத்து காயங்களின் மீது தடவினால் நொடியில் காயம் ஆறிவிடும். அந்த மையை மூக்கினருகே வைத்து நுகரச்செய்தால் இறந்தவன் கூடப் பிழைத்து எழுந்துவிடுவான். அதனால் உலுகாவின் கூட்டத்தினர் பயமில்லாமல் எதிரிகளைத் தாக்கிக் கொன்று வந்தனர்.

ஒகாயாவிடம் நிறைய ஆட்கள் இருந்த போதிலும் எதிரிகளின் தாக்குதல்களில் அவர்கள் காயமுற்று இறக்கலாயினர். ஒகாயாவிடம் உலுகாவிடமிருந்த சக்தி வாய்ந்த மை இல்லை. அதனால் அவன் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான்.

உலுகா தனக்குப் பிறகு அந்த மை தயாரிக்கும் முறை அழிந்துவிடக் கூடாதே என நினைத்து அந்த ரகசிய முறையைத் தன் மகனுக்குக் கற்பித்தான். அந்த ரகசிய முறை இப்போது உலுகாவிற்கும் அவனது மகனுக்கும் மட்டுமே தெரியும்.

உலுகாவை எப்படி அடக்குவது என்று யோசித்த ஒகாயாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படி உலுகாவும் அவன் மகனும் காட்டில் திரிந்து கொண்டிருக்கையில் ஒகாயா தன் ஆட்களுடன் போய் அவர்கள் இருவரையும் சிறைப்பிடித்து விட்டான்.

அவர்களை அவன் ஒரு அறையில் அடைத்து, "உலுகா! உனக்கும் உன் மகனுக்கும் ரகசிய மை தயாரிக்கும் முறை தெரியும். அதை எனக்குச் சொல்லும் வரை உங்களை விடப்போவதில்லை. எப்படியும் அதனை நான் தெரிந்து கொண்டே ஆகவேண்டும். உம் சொல்," என்றான்.

"நீ என்ன வேண்டுமானாலும் செய். ஆனால், நான் அதை மட்டும் சொல்லவே மாட்டேன்" என்றான்.

"ஓகோ அப்படியா? உன்னிடமிருந்து எப்படித் தெரிந்துகொள்ள வேண்டுமோ அப்படித் தெரிந்து கொள்கிறேன்," என்றான்.

ஒகாயா அவர்களைப் படாதபாடுபடுத்திச் சித்திரவதை செய்தும் இருவரும் அந்த ரகசியத்தைக் கூறவில்லை.

அதனால் ஒகாயா, "உங்களைக் கொன்றுவிடப் போகிறேன். எனக்கு அந்த ரகசிய முறையைச் சொல்லப் போகிறீர்களா இல்லையா?" என்று மிரட்டினான்.

அதைக் கேட்ட உலுகாவின் மகன் பயந்துவிட்டான். அவன் உடல் நடுங்கியது. உயிர் போய்விடுமோ என்று அஞ்சினான். இதனை உலுகா கவனித்துவிட்டான். எங்கே தன் மகன் அந்த ரகசியத்தைக் கூறிவிடுவானோ என்ற சந்தேகம் அவன் மனதில் எழுந்தது.

அவன் உடனே ஒகாயாவிடம், "உன்னிடம் ஒரு நிமிடம் தனியாகப் பேச வேண்டும்," என்றான். ஒகாயாவும் அவனைச் சற்றுத் தூரத்திற்கு அழைத்துச் சென்றான்.

"இந்த ரகசியத்தை நான் கூறுவதானால் என் கூட்டத்தவர்க்கு மட்டுமே கூறவேண்டும் என்று சத்தியம் செய்திருக்கிறேன். இப்போது நான் அதை உன்னிடம் சொன்னால் என் மகன் நான் சத்தியத்தை மீறியதை அவர்களிடம் கூறிவிடுவான். அதனால் என் உயிர் போய்விடும். அதனால் நீ என் மகனைக் கொன்று விடு.

"அப்போது யாரும் நான்தான் இந்த ரகசியத்தைக் கூறினேன் என்று என் கூட்டத்தினரிடம் சொல்லமுடியாது. நான் உனக்கு அந்த ரகசியத்தைக் கூறுகிறேன். முதலில் என் மகனைக் கொன்றுவிடு" என்றான்.

ஒகாயாவும் அதற்கு இணங்கி உலுகாவின் மகனைக் கொன்றுவிட்டான். பிறகு உலுகாவிடம், "இப்போது சொல் அந்த ரகசியத்தை," என்றான்.

"முடியாது, நான் சொல்ல மாட்டேன். இப்போது அந்த ரகசியத்தை அறிந்தவன் நான் ஒருவனே. அது என் கூட்டத்தவருக்குப் பாதகமாகப் பயன்படக் கூடாது," என்றான்.

அதைக் கேட்ட ஒகாயா, "அப்படியானால் உன் மகனை ஏன் கொல்லச் சொன்னாய்?" என்று கேட்டான்.

"நீ அந்த ரகசியத்தை அறியும் வாய்ப்பை இழக்கச் செய்வதற்குத்தான். அவன் மிரட்டலால் தன் உயிர் போய்விடுமே என்று பயந்துவிட்டான். அதனால் அந்த ரகசியத்தை அவன் உனக்குச் சொல்லிவிடப் போகிறானே என்று சந்தேகப்பட்டு அவனைக் கொல்லச் சொன்னேன். நான் என் உயிர் போவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. என் கூட்டத்தவர் அழிய நான் இணங்க மாட்டேன். நான் ஒருவேளை இந்த ரகசியத்தை உனக்குக் கூறினாலும் என்னைக் கொல்லத்தான் போகிறாய். என் உயிர் இப்போதே போகட்டும். உனக்கு அந்த ரகசியமும் தெரியாமல் போகட்டும்" என்றான்.

ஒகாயா அதைக் கேட்டுத் திகைத்து நின்றான். அப்போது உலுகா தான் நின்ற மலை மீதிருந்து ஆழமான பள்ளத்தில் சட்டெனக் குதித்து உயிர் நீத்தான்.

தன் இனத்தாருக்காக தன் உயிரையும், தன் மகன் உயிரையும் அர்ப்பணமாக எண்ணிய உலுகாவின் தியாகத்தைக் கண்டு திகைத்து நின்றான் ஒகாயா.

நன்றி:- தினமலர்

ஆன்மீகம்

# யோகர் சுவாமிகள் சந்திப்பு

— டாக்டர் க. கதிர்காமநாதன்

இலங்கையின் வடமாகாணத்தில் தற்போது பிரசித்தி பெற்ற ஊர் என்றால் அது எமது சாவகச்சேரியே. இது இன்று குருஷேத்திரம் போன்று புண்ணிய பூமியாகக் கருதப்படுகிறது. லண்டனிலும் சரி, கொழும்பிலும் சரி எவ்விடமென்றாலும் 'வாருங்கள், வாருங்கள் வடமாகாணத்துக்கு அழைத்துச் செல்கிறோம். அத்தோடு சாவகச்சேரியையும் காட்டுகிறோம்' என்பர். இதை நாம் விமானப் பிரயாணம் செய்யும் ஏஜெண்டிடமும் சரி, கொழும்பில் வாகனம் அமர்த்தும் ஸ்தாபனங்களிலும்சரி காணலாம். ஒருகாலத்தில் அங்குள்ள சந்தை பிரசித்தமானது. முன்னாள் பிரதம மந்திரியான காலி பாராளுமன்ற உறுப்பினர் தகாநாயக்கா அங்கு முருங்கைக்காய் வாங்கியதையும், அந்த முருங்கைக்காய் விற்பனை செய்தவர் பேசிய ஆங்கிலத்தையும் அதிசயமாகப் போற்றினார். முருங்கைக்காய் மாத்திரமல்ல, மட்டுவில் கத்தரிக்காய், மாம்பழம், பலாப்பழம் என்பவையெல்லாம் பிரசித்தம். கண்ணகை அம்மன் கோயில், திருக்கணித பஞ்சாங்கம் என்பவையும் இக்கிராமத்தின் பிரசித்தத்திற்குக் காரணம்.

எமது இந்தச் சந்தையிலிருந்து கண்டி வீதியில் 1 ½ மைல் யாழ் நோக்கிச் சென்றால் நுணாவில் கிழக்கு என்றொரு கிராமம் உண்டு. இக்கிராமத்தில் பாவட்டங்காடு என்ற இடத்திலிருந்த ஒரு யுவதி யோகர் சுவாமிகளைச் சந்திக்க முயன்றார். குழைக்காடு என்று எமது பசுமையான சாவகச்சேரியையும், அடுத்துள்ள கிராமம் பாவட்டை நிறைந்து பசுமையாக இருந்ததால் பாவட்டங்காடு என்றும் அழைத்தனர். அந்த நாட்களில் 1955 காலப்பகுதியில் 30 சதத்தில் பஸ்ஸில் யாழ் செல்லலாம். இப்பெண் தனது தாயாரோடும் மாமனாரோடும் சுவாமிகளைச் சந்திக்க கொழும்புத்துறை சென்றார். வெளியே உள்ள கிணற்றில் கால்முகம் கழுவிக் கொண்டனர். அப்போது ஒருவர் வந்து 'உங்களை வரட்டாம்' என்றார். இவர்கள் விரைந்து சென்றனர். அங்கே சுவாமிகள் கண்மூடித் தியானத்தில் இருந்தார். அவர் முன்நிலையில் இவர்கள் அமர்ந்து கொண்டனர். இவர்களை விட இன்னும் சிலர் ஏற்கனவே அங்கு அமர்ந்திருந்தனர். இவர்கள் அவர்களின் பின்னாலேயே அமர்ந்தனர்.

நேரம் வந்தது. யோகநிலையில் இருந்து சுவாமிகள் கண்களைத் திறந்தார். இந்த யுவதியை மட்டும் சுட்டிக் காட்டி 'D.O.G' என்றால் என்ன என வினவினார். இப்பெண்ணோ தன்னைப் பலர் முன்னிலையில் ஏசப்போகிறாரோ எனப் பயந்தபடி 'நாய்' எனப் பதிலளித்தார். இதற்கு 'G.O.D' என்றால் என்ன என்று கேட்க, இவரோ கடவுள் என்று மறுமொழி கூறினார். 'அதுதான் உனக்கு' என்றார் சுவாமிகள்.

இதன் பொருள் இவர்களுக்கு விளங்கவில்லை. இது போன்ற அனுபவங்கள் பலருக்கு நேர்ந்து இருக்கிறது. கடைசியில் சில வருடங்களின் பின் ஒருநாள் ஒருவரிடம் சோதிடம் பார்க்கும்போது சோதிடர் இப்பெண்ணிடம் 'உனக்கு ஒரு துட்ட தேவதைதான் உதவி' எனக் கூறினார். உடனே தாயார் இது எமது வையிரவர் தான் என அறிவித்தார். இவ்வைரவர் கண்டி வீதியைப் பார்த்துக் கொண்டு ஓலையால் வேயப்பட்ட கொட்டிலில் அவ்வமயம் இருந்தார். இங்கு வயிரவரோடு பிள்ளையாரும் முருகனும் இருந்தனர். காலம் செல்ல எமது கிராம மக்கள் முன்னேற கோயிலும் உயர்ந்தது. கண்டி கதிரேசன் கோயிலில் பணியாற்றிய கோபால் ஐயா அவர்கள் வீடு கட்டி இங்கு தங்கியபோது இக்கோயிலை கந்தசுவாமி கோயிலாக்கினார். சாவகச்சேரி தரைமட்டமாகி விட்டதன் பின்னும் இக் கோயில் சிறு சேதத்தோடு இன்றும் இருக்கிறது.

இனி யுவதியின் கதைக்கு வருவோம். வயிரவரைத் தொழுத இப்பெண்மணி அவரின் அருளால் ஊரார் பெருமைப்படக் கூடிய தலைவனைக் கைப்பிடித்தார். இவர்களின் குடும்பம் ஆல்போல் தழைத்து வாழ்வதற்கு யோகர் சுவாமிகளின் 'DOG - GOD' தீர்க்க தரிசனம்தான் காரணம்.

இன்னுமொன்று. முன்னாள் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபரும் தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்பவருமான தமிழறிஞர் அம்பிகைபாகன் அவர்கள் ஒவ்வொருநாளும் காரில்தான் பாடசாலை செல்வது வழக்கம். ஒருநாள் கார் பழுதாகிவிட்டது. அதனால் பஸ்ஸில் செல்வோமென எண்ணி பஸ் தரிப்பில் மற்றவர்களோடு நின்றார். அந்நேரம் யோகர் சுவாமிகள் காரில் சென்று கொண்டிருந்தார். யோகர் சுவாமிகளின் அன்பர்களில் ஒருவர் அம்பிகைபாகன் ஆவார். இதனால் காரை நிற்பாட்டக்கூறி அம்பிகைபாகனை ஏற்றிக்கொண்டு சென்றார். இச்சம்பவம் 1960ல் நடந்தது. கதைக்க ஒன்றும் இல்லாமல் போகவே அம்பிகைபாகன் "எனக்கு ஒரு மகள் பிறந்தா" எனக் கூறினார். இதற்கு யோகர் சுவாமிகள் "டிரைவர் வண்டியை நிறுத்து" எனக் கூறினார். பின்னர் அதிபரை நோக்கி "சரி நடந்து பாடசாலைக்குச் செல்" என்றார். அதே சமயம் மழையும் பெய்துகொண்டிருந்தது. அம்பிகைபாகன், சுவாமிகள் கூறிவிட்டாரே என்பதால் மழையில்

தெப்பமாக நனைந்து நடந்து பாடசாலை போனார். சிலர் இச்சம்பவத்தைக் கேட்டுச் சிரித்தனர். வேடிக் கையாகப் பரிகசித்தனர்.

இதில் ஒரு உண்மை இருந்தது. ஞானியாகிய சுவாமிகளுக்கு பின்வரும் பலாபலன்கள் தெரியும். ஒருவேளை பிறந்த மகளுக்கு வரும் சுகவீனத்தையோ துன்பத்தையோ நீக்க இவரை இப்படிச் செல் லும்படி கூறினார் போலும். சித்தர் சுவாமிகள் வாழ்வில் இவை நடைபெற்று இருக்கின்றன.

அதிபர் அம்பிகைபாகன் போன்று யாழ் மத்திய கல்லூரி அதிபர் - கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த ஏ.இ. தம்பர், இவரோடு கற்பித்த கலைப்புலவர் க. நவரத்தினம், முன்னாள் அரச அதிபர் சிறிகாந்தா போன்றோரும் சுவாமிகளின் அன்பர்களே. இவர் களுக்கும் இப்படியான அனுபவங்கள் நடந்திருக் கின்றன.

*******

எமது அன்பான வாசகர்களிடமிருந்து அவர் கள் படைப்புக்களை எதிர்பார்க்கின்றோம். அவை கவிதை, கட்டுரை, அரசியல் ஆக்கம், வரலாறு, பொருளாதாரம், சமயம், கலைகள், ஆய்வுகள், தகவல்கள்.... இப்படி எல்லாமே தேவை. உங்கள் படைப்புக்கள் மூலம் எம்மை ஊக்கப்படுத்துங்கள். - ஆசிரியர்


சுதுமலைக் கவிஞர்

கந்தையா இராஜமனோகரன்

அவர்களின்

மூன்று கவிதை நூல்கள்

1. நாற்று

2. தமிழிசைப் பாடல்கள்

3. வானொலிக் கவிதைகள்

ஒவ்வொன்றும் £5.00 (அஞ்சல் மூலம் £6.50)

மூன்று நூல்களும்... £12.00 (அஞ்சல் மூலம் £16.00)

தொடர்பு: 07931 531 305



M Markandan & Co.

Solicitors & Administrators of Oaths

- Immigration / Home Office
- Refugee - Asylum
- House / Flat Purchase or Sale etc.
- Commercial Conveyancing
- Matrimonial
- Licensing
- Student Visa To Canada
- Overseas Work Permit
- Employment Law - No Win No Fee Basis
- Advice & Assistance at Police Station
- Traffic Matters
- Free Training Classes In Computing, Accounts And English For Asylum Seekers

Community Legal Service

Immigration Franchise

M. Markandan LL.B

Tel : 020 8514 8188
Fax : 020 8514 8303

DX 4715 East Ham

Thamil House, 720 Romford Road,
Manor Park, London E12 6BT

Email: mm@markandan-solicitors.co.uk

**வாசகர் கடிதம்:** *அட்டைப்படம் அருமை. ஈழத்து பழம்பெரும் கோயில்களையும் பிரசுரியுங்கள். ஒரு இதழைப் பார்க்க வேண்டுமாயின் முதலில் முகப்பைப் பார்க்க வேண்டும் என்பார்கள். அப்போதுதான் அந்த இதழின் சிறப்பு தெரியும் என்பார்கள். உண்மை! இத்தகைய சிறப்பு இந்த இதழிலும் தெரிகிறது. கயமையும், காழ்ப்பும் களைந்து போகுமா? மிகவும் சிறப்பான விளக்கம். உண்மை. ஆசிரியருக்கு நன்றி! கவிதைகள் மிகவும் அருமை. தென்கச்சி அவர்களின் முடியின் முடிவு வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தது. சடங்கும் சம்பிரதாயமும், பார்த்திபன் சில நினைவுகள்... இன்னும் நிறைய எழுதக்கூடாதா என்ற ஏக்கம். இந்தியாவும் ஈழத்தமிழர்களும், சிறுகதை (லெ. முருகபூபதியைப் பாராட்ட வேண்டும்) "விருந்து" மிகவும் அருமை. கடைசிப்பகுதி எம்மவர்க்கு ஒரு நல்ல ஊக்குவிப்பு.*

***எஸ்.கே. மைக்கல்***

---

*அன்புள்ள ஆசிரியர் அரவிந்தன் அவர்கட்கு,*

*இலண்டனில் வெளிவரும் 'தமிழர் தகவல்' தரம்மிக்க ஒரு பத்திரிகையாக வெளிவருவது எங்கள் பாக்கியம். எழுத்துப் பிழைகள் இல்லாமலும், ஆங்கிலப் பதங்கள் கலக்காமலும் பிரசுரிக்கப்படுவதைக் காண மட்டற்ற மகிழ்ச்சி. தங்களுடைய முயற்சிக்கும், படைப்புக்கும் எமது ஆதரவு எப்போதும் உண்டு.*

*நன்றி! வளர்க தமிழர் தகவல்!*

***பி. உமா மகாலிங்கம்***

---

*தவறுக்கு வருந்துகிறோம்!*

*இசைத் திறமைக்கு உதவிய பலரில், லண்டன் வாழ் தமிழரின் முதல் வானொலி Sunrise Radio டாக்டர் நித்தியானந்தன், லண்டனில் பிறந்து வளர்ந்த சிறுவர்களின் முதல் இசைக்குழுவான வசந்த மலர்கள் (Spring Blossom) உருவாக்கிய திரு. திருமதி. டாக்டர் ஜெயநாதன் குடும்பத்தாருக்கும், எமது பிரபல மூத்த அறிவிப்பாளர் B.H. அப்துல் ஹமீத் அவர்கள் அறிமுகப்படுத்தி, பாராட்டையும் பெறவைத்த 'பூபாளராகங்கள்' புகழ் திரு. மகாலிங்கம் சுதாகரன் அவர்கட்கும் நாம் நன்றி தெரிவிக்கத் தவறிவிட்டோம். நாம் மறக்கவில்லை. நன்றி! அத்துடன் இளம்கலைஞர் ஜக்சன் பொஸ்கோவைப் பெருமைப்படுத்தியதும் பாராட்டத்தக்கது. இவர் பிரிட்டனில் முதல் இன்னிசைக் குரலாகத் தெரிவுசெய்யப்படாதது மிகவும் துரதிர்ஷ்டவசமானதானாலும், ஐரோப்பிய ரீதியில் முதல் இன்னிசைக் குரலாகத் தெரிவானது மிகவும் பொருத்தமானதே! இவர் ஏற்கனவே அமுதகலசம், அனுபல்லவி, இளையகானக்குயில், கானக்குயில் போன்ற பல விருதுகளைப் பெற்ற ஒரு வளரும் திறமைமிக்க கலைஞர். வாழ்த்துக்கள்! நன்றி!*


செல்வா, தயா, T.T & Friends


# *KRS Oriental Stores*

**Indian - Sri Lankan & Continental Foods**
**Fruit - Veg. & Off Licence**

உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், குடிவகைகள், இலங்கை - இந்திய பசுமைமிகு மரக்கறிவகைகள், கடலுணவுப் பொருட்கள் (மீன், இறால், நண்டு, கணவாய், கூழ்மிக்ஸ், மற்றும் பல வகைகள்) அத்துடன் இலங்கை - இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள் CD, AUDIO & VIDEO என்பவற்றை சகாய விலையில் பெற்றுக்கொள்ளவும், மற்றும் பூஜைக்குத் தேவையான அபிஷேகப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

**33, Lee High Street,**
**Lewisham,**
**London SE13 5NS.**
**Tel: 020 8297 9432**





VOICE-DIRECT
HOME ACCOUNT
FROM THE COMFORT OF YOUR HOME
WHEREVER YOU ARE...
0800 5194 519
0207 177 22 00
www.voice-direct.com
easy connections
clear lines
affordable rates
SRI LANKA 13p
INDIA 10p
EUROPE 2p
20% FREE TALKTIME
ANOTHER PRODUCT OF:
Voice Telecom
your link to the world

சென்ற இதழ் தொடர்ச்சி...

# 'பார்த்திபன்' – சில நினைவுகள்!



"அல்லையாண்டமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஏந்திய கையோடும்
வெய்துயிர்ப்போடும் – வீரன்
கல்லையாண்டுயர்ந்த தோழாய்
கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பளவும் நின்றான்
இமைத்திலன் நயனம் என்றான்"

கம்பராமாயணத்தில் என்னை ஆக்கிரமித்த பாடல் இது. வீரம், சோகம், பாசம், பரிவு, பண்பு தன்னலமற்ற தியாகம் இப்படிப் பலவற்றை இந்தப் பாடலில் பார்க்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாய் 'கடமை உணர்வு' இங்கே விஞ்சி நிற்கிறது. தன் தலைவனை – அல்ல தமையனைக் காக்கும் தன்மைதான் இதன் அடிநாதம். பார்த்திபன் என்ற **திலீபன்** இந்த உணர்வின் முழு உருவினன். தமிழீழப் போராட்டத்தில் இலக்குவனாகத் திலீபனும், அபிமன்யுவாகக் கிட்டுவும் நம்முன் சமகாலத்தில் வாழ்ந்து காட்டினார்கள்.

## ஏமாற்றத்தின் விளிம்பில்

பலாலியிலுள்ள இந்தியப்படைகளின் தலைமை அலுவலகத்தில் இருந்து கொழும்பில் உள்ள தூதுவரின் அலுவலகத்துடன் தொடர்பு ஏற்படுத்தித் தரப்பட்டது. அன்று மதியம் திரு. கோடீசுவரனுடன் பேசுவதாக டிக்சித் ஒப்புக்கொண்டிருந்தார். காலை 11.30ல் இருந்தே அதற்காகக் காத்திருந்தோம். ஒருமணி நேரத்தின் பின்பு பூரி என்னும் இரண்டாவது செயலாளரிடமிருந்து ஒரு அழைப்புக் கிடைத்தது. இன்று டிக்சித் கொழும்புக்கு வெளியே செல்கிறார் என்றும் பேசுவதை மறுநாள் ஒத்திப்போடுமாறும் கேட்கப்பட்டது. நாம் திரும்பிச் சென்றோம். மறுநாள் அதேநேரம் அதே இடத்தில் காத்திருந்தோம். வேறு ஒரு காரணம் கூறி அடுத்தநாள் குறிக்கப்பட்டது. அதற்கு அடுத்த நாளும் அதேபோன்று இன்னொரு காரணம் கூறினர். காலம் தாமதப்படுத்தப்பட்டது. சந்திப்பு தவிர்க்கப்பட்டது. வேண்டுமென்றே இந்த விளையாட்டை நடத்தினார்கள். வேதனையும் ஏமாற்றமும் திரு. கோடீசுவரன் முகத்தில் நிழலாடின. அவர் சோர்வடைந்து போனார். "தம்பி சொன்னானே! தம்பி சொன்னானே! எப்படி இவர்களை அவன் கணக்கிட்டு வைத்திருக்கிறான் பார்த்தாயா" என்று தலைவர் சொன்னதை நினைவில் வைத்து கோபத்துடன் வெதும்பினார். கடுமையான சில சொற்பிரயோகங்கள் அவர் வாயில் இருந்து வந்தன. சில இந்திய இராணுவ அதிகாரிகள் அவரைச் சமாதானப்படுத்தினார்கள். உண்மையாக வருத்தமும் தெரிவித்துக் கொண்டார்கள். நேர்மையும் மனிதத்துவமும் அற்ற மனிதர்களிடம் பதவியும் அதிகாரமும் சேர்ந்திருக்கும்போது ஏற்படும் சீரழிவுகளை அன்று அனுபவத்தில் காணமுடிந்தது. ஒரு அப்பாவியின் உயிரைக் காப்பாற்றுவதற்கு உத்தரவாதம் தரமுடியாத கோழைத்தனத்தின் கொடூரத்தையும், கயமையையும், இந்திய வல்லாதிக்கத்தின் கபடத்தையும் அச்செயல் காட்டி நின்றது.

## வாடிய மலராய்...

வேதனையுடனும், மனச்சுமையுடனும் நல்லூர் ஆலய முன்றலுக்குப் போனேன். முன்னே நின்ற சிலர் அவனைப் பார்க்க அனுமதிதர மறுத்தனர். பார்த்திபன் படுத்திருந்தவாறே இதைப் பார்த்தான். அவனது கரம் பக்கத்தே வருமாறு என்னை அழைத்தது. ஓ! வென்று அழவேண்டும் போல் ஆனேன். அவனது பள்ளித் தோழன் விக்கி அவனருகே என்னைப் பிடித்துப் போகிறான். அட்டகாசமாகச் சிரிக்கும் பார்த்திபன் முகத்தில் ஒரு மென்மையான சிரிப்பைக் காண்கிறேன். "இடுக்கண் வருங்கால் நகுக..." என்பது இதுதானோ? கூர்மையான அந்த விழிகள் குழிவிழுந்து காணப்பட்டன. குறும்பு பேசிடும் உதடுகள் கூம்பிக் கிடந்தன. வெண்மையான பற்கள் மங்கி வெளியே தெரிகின்றன. சிலிர்த்து நிற்கும் அவன் தலைமுடிகள் காய்ந்து கிடக்கின்றன. சூம்பி ஒட்டி உலர்ந்துபோய் இருக்கிறான். ஒட்டிய உடம்புக்குள்ளே அவன் மார்புக்கூடு அசைந்து அவன் அவலத்தைக் காட்டுகிறது. கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. விக்கி என்னை அணைத்தவாறு அங்கிருந்து அகன்று சில அடிதூரம் என்னுடன் நடந்து வருகிறான். நின்று அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கிறேன். கட்டுப்படுத்த முடியாத சோகத்தை என்னிடமிருந்து மறைக்க வேறு எங்கோ தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு விக்கி விம்முகிறான். "வாசமலர் ஒன்று வாடிக்கிடக்குது பேசமுடியாமல்" என்ற 'புதுவை'யின் கண்ணீர் வரிகள் காற்றில் மிதந்து வருகின்றன.

ஒவ்வொருநாளும் காலையும் மாலையும் நான் வழிபடும் புண்ணிய தலமாக அவன் மேடை எனக்குத் தரிசனம் தந்தது. நள்ளிரவு வரை நிலத்தில் அமர்ந்து அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் விரதத்தைத் தான் என்னால் செய்யமுடிந்தது. ஒவ்வொரு இரவும் மெல்லிய குரலில் சுவாசத்தை இழுத்துப் பிடித்து அவன் பேசுகிறான். "தமிழீழத்தின் விடிவை என் சகாக்களுடன் விண்ணில் இருந்து பார்ப்பேன்" என்று ஆறுதல் சொல்கிறான். இப்படியே அவன் குரல் தேய்ந்துகொண்டே வந்தது. அவன் செயற்றிறன் மறைந்துகொண்டே வந்தது. உடல் நலிவுற்றுப் போகிறது. பார்க்க முடியாத

கொடுமையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எத்தனையோ பேர்கள் வந்தனர். எதை எதையோ எல்லாம் பேசினார்கள். ஆனால் வரவேண்டிய டிக்சித் என்ற கல்நெஞ்சக்காரன் வரவேயில்லை. காந்தீயத்தின் கொந்தராத்துக்காரர்கள் காருண் யத்தை மறந்துபோனார்கள். ஒரு விலைமதிப்பற்ற உயிருடன் விளையாடினார்கள்.



அந்தப் பன்னிரண்டு நாட்கள் யாழ் மண்ணில் எல்லா முகங்களுமே இருண்டுபோய் இருந்தன. அமங்கலமான பூமியாகத்தான் அது காட்சி தந்தது. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத சோகம் அது. இன்று நினைத்தாலும் உடல் நடுங்குகிறது. தனது தியாகத்தின் பின் தனது தாகம் மக்கள் இயக்கமாக மாறுமென்பதுதானே அவன் கனவு. அந்தப் பன்னி ரண்டு நாட்கள் கடுந்தவத்தில் தமிழ் கூறும் நல்லு லகத்துக்கு அது கிடைத்தது - கிடைக்க வைத்தமை தான் அவன் தவவலிமை.

1987 செப்டெம்பர் 26. தமிழினத்தின் விழிகளில் கண்ணீர் சிந்த, காந்தீயத்தைக் கற்பழித்தவர்களின் கயமையை உலகுக்குக் காட்டிய அந்தநாள் விடிந் தது. அன்று நள்ளிரவு. நலிந்து, மெலிந்து, தன்னினை வற்றுக் கிடக்கும் அவன் உடலிலிருந்து ஒரு உசும்பல். அவன் வாய் ஏதோ கேட்கிறது. அவன் அருகே இருந்த அந்தப் பிரபலமான மருத்துவ நிபுணர் - மெதுவாக அவன் உதட்டருகே தன் காதை வைத்துக் கேட்கிறார். அவருக்குப் புரிந்துவிட்டது. அவன் நம் மிடமிருந்து விடைபெறப் போகிறானென்பது. அது ஒரு ஜீவனின் இறுதிக் கோரிக்கை - இயல்பான கடைசி முனகல்.

அந்த மருத்துவ மேதை எதையோ எண்ணி ஒரு சில விநாடிகள் தயங்குகிறார். மெதுவாக மேடை யின் ஓரத்தில் அமர்ந்து இருக்கும் அந்த உருவத்தை நோக்கிப் போகிறார். அந்த உருவமோ அவரைக் கண்டு கொள்ளாதது போல் கீழே தலையைக் குனிந்து தரையில் கோடிட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத் தவஞானி வேறு எவருமல்ல. பார்த்திபனின் தந்தையும் தாயுமான இராசையா மாஸ்டர் தான் அவர். அவரது காதின் அருகே மருத்துவமேதை குனிந்து ஏதோ பவ்வியமாகச் சொல்கிறார். இராசையா மாஸ்டர் அதை மறுப்பது தெரிகிறது. வைத்தியர் முகம் இருண்டு காணப்பட்டது. கூடி யிருந்த மக்களிடையே பரபரப்பு அதிகமாயிற்று. சிலர் வாய்விட்டு அழத்தொடங்கிவிட்டார்கள். இன் னும் சிலர் மேடையை நோக்கி ஓடத் தலைப்பட் டார்கள். இடையே கட்டப்பட்டிருந்த கயிறுகள் அறுந்துபோயின. போராளிகள் சிரமப்பட்டுக் கட் டுப்படுத்தினார்கள்.

## அணைந்த தீபம்!

பார்த்திபன் என்ற திலீபனின் தந்தை எழுந்து நின்றார். மருத்துவர் அவரிடம் மீண்டும் ஓடிப் போனார். கெஞ்சும் குரலில் தன் விண்ணப்பத்தை முன்வைக்கிறார். அந்த விண்ணப்பம் இதுதான். "ஐயா! திலீபன் தண்ணீர் கேட்கிறான். இறுதியாக எல்லா உயிரும் விடைபெறும்போது கேட்பதுதான் இது. அவன் ஆத்ம சாந்திக்காக இப்போதாவது அவன் வாயில் இரண்டு சொட்டுத் தண்ணீர் விட்டு விடலாமா?" என்பதுதான் அது. தன் மகனை விஞ் சிய தந்தையாக இராசையா மாஸ்டர் உறுதியாகச் சொல்கிறார். "டாக்டர்! **என் பிள்ளையின் சபதத் தையும் இலட்சியத்தையும் இந்தக் கடைசி நேரத்தில் கொச்சைப்படுத்தி விடாதீர்கள். அவனை அப்ப டியே போகவிடுங்கள்**". ஒருமுறை விம்மித் தணிந்த அந்தத் 'தாயுள்ளம்' தந்தையின் உருவத்தில் அங்கு நின்று சொல்லுகிறது. இங்கேதான் தியாகத்தின் உச்சத்தை எட்டியது பார்த்திபனா அல்லது அவன் தந்தை இராசையா மாஸ்டரா எனக் கணிப்பிட முடி யவில்லை. இப்படி ஒரு தந்தையைப் பார்த்திபன் பெற்றதுதான் அவன் சிறப்புறக் காரணமா? புரிந்து கொண்ட இதயங்கள் எல்லாம் ஓவென்று அழுதன. ஆனால் அந்தத் தந்தை அழவில்லை. அழுவது கூட அவன் தியாகத்தைக் குறைத்து விடுமென்பது அந்தத் தந்தையின் எண்ணம். நிமிர்ந்து, தைரியமாக, காய்ந்து கருகிக் கிடக்கும் தன் கண்மணியின் உருவைக் கூர்ந்து நோக்குகிறார். ஒரு சிறிய குலுக்கல்- இதழோரத்தில் ஒரு நெழிவு - அவன் கடைசியாக அவரிடமிருந்து விடைபெற்றுவிட்டான்.

பேசும் நிலையில் இருந்தபோது அவன் இறுதி யாகப் பேசியது 'மக்கள் புரட்சி வெடிக்கும்' என்பது தான். அவன் தன்னை அர்ப்பணித்துக் கொண் டதன் பின் அது மக்களிடையே நடந்தது. மக்களே இயக்கமாகி இயக்கமே மக்களானது. இருபத்தி நான்கு ஆண்டுகள்கூட அவன் இந்த மண்ணில் வாழவில்லை. ஆனால் ஒரு நூற்றாண்டின் வரலாற் றினை வாழ்ந்துகாட்டிவிட்டான். தன் இனத்துக்காக உறக்கம் துறந்து, உணவை மறந்து உணர்வினை ஊட்டிய அந்தச் சிறுமகன் விடைபெற்றுப் போய் விட்டான். 'மகாத்மா'வால் கூட நினைத்துப் பார்க்க முடியாத நீர் தவிர்ந்த நோன்பு. இன்னொருவரால்

எப்போதுமே செய்யப்பட முடியாதது. ஆனால் திலீபன் என்ற இந்தத் தியாகியால் மாத்திரமே முடிந்தது. அந்த 'ஆத்ம பலம்' தான் புலிகளின் முதலீடு. "மலர் இன்றோ நாளையோ வாடவேண்டியதுதான். வாடும்வரை மணம் வீசினால்தான் மலரின் வாழ்வு வெற்றி பெறுகிறது. மனித வாழ்வும் அதுவே" என்று 'கிரௌஞ்சவதத்தில் - காண்டேகர்' கூறியிருப்பதன் அர்த்தம் புரிகிறது.

* * * * * * * * *

ஊரெழுவில் பிறந்து உலகமெல்லாம் வியக்கும் தியாகியாக உயர்ந்த **இராசையா பார்த்திபன்** என்ற **திலீபன்** பற்றிய இக்குறிப்புகள் சில நினைவுகள் மாத்திரமே. இது அவன் சரிதம் அல்ல. அவன் பற்றிய ஆய்வும் அல்ல. அவனைப் பற்றிய வரலாறு வடிக்கப்பட வேண்டுமானால் இன்னும் சில ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய கட்டாயமாகிறது. ஏனெனில் இவன் சொன்ன 'வார்த்தைகள்' இன்னும் வரலாறாக மாறவில்லை. இவன் ஆற்றிய நீண்ட சொற்பொழிவுகள் இன்னும் சீராகத் தொகுக்கப்படவில்லை. இவனுடைய தீர்க்க தரிசனங்கள் நிறைவேறும் காலங்கள் நெருங்கிவருவதாக ஒரு உள்ளுணர்வு சொல்கிறது. அதுவரை 'காலன்' அனுமதித்தால் காத்திருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். என் இதயத்தின் ஓரத்தில் சிம்மாசனமிட்டு இருந்து கொண்டு அட்டகாசமாகச் சிரிக்கும் அந்தக் கண்ணாடிக் கண்ணனின் நினைவுகள் என்றும் என்னுள் நிலைத்திருக்கும்.

நன்றி! – அரவிந்தன்

# புயலாக நீ வருவாய் என்றே நானறிவேன்!

**– கலைஞர் கவிதை**

"பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறந்து
சிறுத்தையே வெளியில் வா" ! என்று

புரட்சிக் கவிஞர் இருந்தால் இந்நேரம் உன்னை
அழைத்திருப்பார்; அணைத்து மகிழ்ந்திருப்பார்.

அய்யாவும் அண்ணாவும் இருந்திருந்தால் ஆரத் தழுவியிருப்பர்.
அவர்களையெல்லாம் அந்தோ; இழந்துவிட்டோம்!

நாடி நரம்புகளில் ஓடுகின்ற குருதிப்புனலாக
நாசியில் இழைகின்ற சுவாசமாக

நான் வளர்த்த தங்கம் மாறன் இருந்திருந்தால்;
நாளும் 'மாநிலங்களவை ஆசான்' என்று தன்னை விளித்துத்

தோளுயர்த்தித் துணிவுமிகு நெஞ்சுயர்த்திப் பேசுகிற போர்
வாள் நிகர்த்த வைகோ வருக என வாழ்த்தியிருப்பார்.

ஒருநாளா இருநாளா; ஒன்றரை ஆண்டு என்
உயிரனைய உன்னைச் சிறையில் அடைத்து வைத்தால்தான்

திருநாள் கொண்டாட முடியும் எனத் தீர்மானித்த
தீய சிந்தனைக்குச் சொந்தக்காரர் அதைச் செய்து காட்டினர்.

ஈழத் தமிழருக்காக இந்தியாவில்
எவர்தான் குரல் கொடுக்கவில்லை?

இந்திரா காந்தி முதல் எல்லாத் தலைவர்களுமே
அரவணைத்து ஆதரவுக் கரம் நீட்டவில்லையா?

வாஜ்பாயே வந்திருந்து வாழ்த்திடவில்லையா,
விடுதலைப் போராளிகளை ஆதரித்த மதுரை மாநாட்டில்?

பத்மநாபா மற்றும் பதின்மர் கொலைக்குப் பின்னும்
விடுதலைப்புலிகளுக்கு நற்சான்று அளித்து ஜெயலலிதா



படைகொண்டு சென்று பாரத
நாடு; தனி ஈழநாட்டைப்
படைத்திட வேண்டுமெனப் பரிந்
துரை செய்து,

பத்திரிகைகளில் பேட்டி அளித்த
தெல்லாம் பொய்யா?
தேதி வாரியாகத் திரட்டியுள்ள
ஆதாரங்கள் தேவையா?

இளந்தலைவர் ராஜீவை இழந்த துயர்;
இணையற்ற துயர்! ஈடற்ற துயர்!

இதயமற்றோர் தான் இதனை மறுப்பர் என்பதை
இதயமுள்ள நாம் எங்கும் எப்போதும் சொல்லத் தயார்!

பழி ஏதாவது போட வேண்டுமென்று
பல நாட்கள் பசியோடு காத்திருந்தது போல்

உன்னையும் நம் உடன்பிறப்புகள் எண்மரையும்
'பொடா' எனும் கொடிய சட்டத்தில் போட்டன்றோ வாட்டினர்!

'எதையும் தாங்கும் இதயம் நமக்கு உண்டு
இதையும் தாங்கும் பக்குவம் மிகவும் உண்டு' என

வையத்தில் நிலைநாட்டிய வற்றாப்புகழ்
வைகோ, நீ வருக! வாழ்க!

தீரன் நீ - வீரன் நீ - திக்கெட்டும் பரவிடும்
தீக்காட்டுக்குள்ளேயும் தென்றலாய் உலவிடும் தியாகி நீ-

தெளிவற்றோர் இதனை உணராத காரணத்தால்
ஒளியற்றுப்போன கருத்துக் குருடரானார்.

'இம்' என்றால் சிறைவாசம்
'ஏன்' என்றால் வனவாசம் என்ற

உயிர்க்கொல்லி சர்வாதிகாரத்தை
உருசி கண்ட பூனைகள் எல்லாம் உலகில்

உருண்டுவிட்ட வரலாற்றை மறந்து விட்டு
இருண்டுவிட்ட நெஞ்சத்தின் உடைமையாளர்கள்;

இரும்புக் கோட்டைக்குள் உனைப்போட்டு வதைத்தார்! பாவம்;
ஏறுநடை சிங்கத்தை எத்தனைதான் கொடுமை செய்தாலும்

எலியாக முயலாக அது மாறுவதுண்டோ?
புலியாக புயலாக நீ வருவாய் என்றே நானறிவேன்!

அப்படித்தான் அன்புத் தம்பி; நீ வந்துள்ளாய்
செப்படி வித்தைகள் இனிச் செல்லுபடியாகாதென்று

செங்கோலேந்திகட்கு வெறும் சேதிகளாக அல்ல;
'சங்கொலி' முழக்கமாகவே செய்திடுவாய்! உன்

பெற்ற தாயின் முகம், உற்ற துணைவி முகம்,
மற்றுமுள்ள நண்பர்கள் மழலையர் சுற்றத்தின்முகம்


பூத்திருக்கும் இந்நாளில் உனைக் காணக்
காத்திருக்கும் என் கண்கள் என

எனையறிந்த நீ அறிவாய்; வேறு
உனைத்தவிர யார் அறிவார் இந்த உண்மை!

- நன்றி: முரசொலி


லண்டனில் அதிக வாசகர்களைக் கொண்ட
ஒரு தமிழ்ச் சஞ்சிகை **தமிழர் தகவல்.**
தமிழர் தகவலில் விளம்பரம் செய்து பயனடைவீர்.








# வருமா சுதந்திரம்?

- உமா மகாலிங்கம்

தமிழர் தகவல் மாசி மாத இதழில் வெளிவந்த இந்தியாவும் ஈழத் தமிழர்களும் என்ற "பொன் லட்சுமி" அவர்களின் கட்டுரையை வாசித்த பின்னர், இக்கட்டுரையை எழுதவேண்டும் என்ற எண்ணம் என்னைத் தூண்டியது. அதன் பிரதிபலிப்பே இதுவாகும். இலங்கைவாழ் தமிழர்கள், தமது அடிமைத்தனத்தின் நிலையிலிருந்து மீண்டு, சுதந்திர சுகவாழ்வை அடைவதற்கு இந்திய அரசை எதிர்பார்த்திருப்பின், அது ஒரு இலவுகாத்த கிளியின் கதையாகவே இருக்கும்.

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த முன்னாள் பிரதமர் நரசிம்மராவ், இந்திய அரசுகள் எப்போதுமே தன் சொந்த அரசியல் நலனுக்காகவே செயல்படும் - செயற்பட்டது - இந்திய இராணுவம் அனுப்பப்பட்டதும் அந்த நோக்கத்தின் வெளிப்பாடே எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஏனெனில், கடந்தகாலச் சரித்திரம், நடந்து முடிந்த சம்பவங்கள் அனைத்திலுமே, ஈழத்தமிழர்களின் நலனுக்கு எதிராகவே, இந்தியா செயல்பட்டவை கண்கூடு. எத்தனையோ மைல்களுக்கப்பால் இருக்கும் நோர்வே நாடு காட்டிய அரவணைப்பு, அருகில் இருக்கும் அண்டைய நாடான இந்தியாவுக்கு இயலாமல் போனது, ஈழத் தமிழர்களின் துர் அதிர்ஷ்டமா அல்லது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை என்ற மறைமுகச் சதியா?

இந்தியாவின் உள்ளரங்கச் சதியை, தென் இலங்கை வாழ் சிங்களவர்கள் உணரமறுத்தாலும், ஈழத்தமிழர்கள் உணரத் தலைப்பட்டு விட்டனர். ஈழத்தின் ஒரு சிறு பகுதிக்குள் அடங்கக் கூடிய விஸ்தீரணமுள்ள சிங்கப்பூர், பொருளாதார வளர்ச்சியில் பிரமிக்கத் தக்க வகையில் முன்னேற்றமடைய முடியுமானால், தமிழீழம் என ஒரு நாடு மலர்ந்து விட்டால் அதன் வளர்ச்சியைத் தடுத்துவிட முடியாமல் போய்விடுமோ என்ற எரிச்சல். இதன் காரணமாகவே, ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வு என ஈழத்தமிழர்களை ஏமாற்றிய வண்ணமே இராஜதந்திர நகர்வு முன்னெடுக்கப்படுகிறது.

இலங்கை சுதந்திரமடைந்து 56 வருடங்களாகியும், அழகிய இந்தத் தீவின் வளங்கள் பலன்தரக் கூடிய வகையில் பயன்படுத்தப்படவில்லை. சூழவரக் கடல் வளமும், மத்தியில் மலைவளமும், வற்றாத நதி வளமும் அடங்கிய இத்தீவின் இயற்கை வளங்கள், உரிய முறையில் ஆட்கொள்ளப்படவில்லை. மாறாக, அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நுகர்வுப் பொருட்களை நம்பியே, பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் ஊக்குவித்தன.

இன்று இலங்கையின் அரசியல் பிரச்சினையின் மூலகாரணமே, பொருளாதார சீர்கேடுதான் என்பதை ஒருசில சிங்களத் தலைவர்கள் இப்போது உணரத் தலைப்பட்டுள்ளனர். ஈழத் தமிழர்களின் சுதந்திர வேட்கை எங்கே ஆரம்பமாகியது என ஆராய முற்பட்டால், சரித்திரம் விடைகூறும். இயற்கையாகவே ஈழத்தமிழர்கள் வாழ்ந்த இடங்கள் வளம் பொருந்தியதாக அமையவில்லை. இதன் காரணமாகவே, கல்வியை நம்பியும், அரசுத் தொழில்களை நம்பியும், வாழ முற்பட்டார்கள். இதற்கு முட்டுக்கட்டை போட்ட, தனிச்சிங்கள மொழியாக்கச் சட்டமும், உயர்தரக் கல்வியில் தரம்பிரித்தல் நடைமுறையும் தான் ஈழத் தமிழர்களைப் படிப்படியாகப் பொருளாதார ரீதியில் பின்தங்கவைத்தது. இப்பிரச்சினைகளில் ஆரம்பித்த, ஈழத்தமிழர் போராட்டம் இன்று தனிநாடு கோரும் நிலைக்குத் தள்ளவைத்தது தென்இலங்கைவாழ் சிங்கள ஆட்சியாளர்களின் மதியீனமே.

முன்னுக்குப் பின் முரணான கொள்கையுடைய சிங்களக் கட்சிகள் ஆட்சிக்கு வரும் ஒரே நோக்கத்தை அடைய இன்று கைகோர்த்து அரசியல் இலாபம் தேட முன்வந்துள்ளனர். 50 வருடங்களாகப் புரையோடிப்போன, ஈழத்தமிழர் பிரச்சினையை, தீர்க்கமுடியாத சிங்களத் தலைவர்கள் இனிமேல்தான் ஞானம் பிறந்து தீர்த்துவிடுவார்கள் என்பது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகவே முடியும். இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டு சமரசம் காணுமா என்பதும் பகற் கனவுதான்.

திருகோணமலையில் குத்தகைக்கு எடுக்கப்பட்ட எண்ணெய்க் குதங்கள், பலாலியில் திட்டமிடப்பட்டுள்ள பாரிய விமான இறங்குதுறை, விரையில் கைச்சாத்திடப்படவிருக்கும் இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம், இவை யாவும் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்க எடுக்கும் நயவஞ்சகமான இந்திய நகர்வுகள். இன்று தென் இலங்கை வாழ் சிங்கள அரசியல் தலைவர்கள் இந் நடவடிக்கைகளை தமக்குச் சாதகமாகக் கருதலாம். மாறாக காலப்போக்கில், இலங்கை பொருளாதார வளர்ச்சியில் தலையெடுக்க முடியாமல் தத்தளிக்கப் போவதை இவர்கள் எப்போது உணரப்போகிறார்கள்?

இனவாத அரசியல்வாதிகளோ, இலங்கை முழுவதும் தமக்கே சொந்தம் என உரிமை கோருப

வர்களோ, இத்தீவின் ஒரு பகுதியைப் புறக்கணிப்பது எப்படி நியாயமாகும். இலங்கை சுதந்திரமடைந்து 56 வருடங்கள் ஆகியும், வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இதுவரை கண்ட அபிவிருத்திகள் தான் எவை? ஒருகாலத்தில் அமரர் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் அமைச்சராக இருந்தபோது வடக்கில் உருவாக்கிய காங்கேசன்துறை சிமேந்துத் தொழிற்சாலையும் பரந்தன் இரசாயன தொழிற்சாலையும், கிழக்கில் வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையும், தான் தமிழ் மக்களுக்கு அள்ளிப் போட்ட பிச்சைகள். இவைகள் எதுவும் பின்பு அபிவிருத்தி செய்யப்படாமல் ஆரம்ப நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தன. தற்போது முடங்கிக் கிடக்கின்றன. சிங்கள அரசாங்கங்களால் தமிழ் பகுதிகளை அபிவிருத்தி செய்ய மனம் இல்லாது போனால் அப்பகுதிகளைத் தம் சொந்த நிலமாகக் கருதும் மக்களிடம் கையளிப்பதில் ஏன் தயக்கம்? இலங்கையைத் துண்டாட விடமாட்டோம் என முதலைக் கண்ணீர் வடிக்கும் அரசியல்வாதிகள், 50 வருடங்கள் என்ன, 100 வருடங்கள் போனாலும் தங்கள் தவறை உணரப்போவதில்லை.

ஏற்கெனவே இலங்கை துண்டாடப்பட்டு, இரு பகுதி நிர்வாகம் தாபிக்கப்பட்டுவிட்டது. இரண்டு தேசியக் கொடிகள் இப்போது பறக்கின்றன. இரண்டுபட்ட இனங்களை ஒன்றுசேர்க்கும் நடவடிக்கைகளில்தான் கடந்த அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளில் இறங்கியது. இம்முயற்சியை வரவேற்ற உலகநாடுகள் பல கோடிக்கணக்கான பண உதவியைத்தர முன்வந்தன. இம்முயற்சி கைகூடினால், அரசியல் இலாபம் தேடும் இனவாதக் கட்சிகளுக்கு வருங்காலம் அஸ்தமித்து விடுமோ என்ற ஐயப்பாடு புகுந்து கொண்டது. இதன் வெளிப்பாடுதான், இன்று தென் இலங்கையில் குடிகொண்டுள்ள குழப்பமும், இனவாதக் கட்சிகளின் கூட்டணியும்.

இக்கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில், இலங்கை ஜனநாயகக் குடியரசின் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட செய்தியும், தேர்தலுக்கான திகதியும் நிச்சயமாகியுள்ளது. பாராளுமன்றம் கலைக்கப்பட்ட காரணத்தை விளக்கிய ஊடக அமைச்சர், நாட்டின் பாதுகாப்பு கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். அதேசமயம், பாராளுமன்றம் கலைக்கப்பட்ட கையோடு, இதுவரை எதிர்க்கட்சியாக இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான உறுப்பினர்கள் முதலில் சந்தித்தது இந்திய அரசின் இலங்கை ஸ்தானிகரை என்பது கவனிக்கப்பட வேண்டிய தொன்று.

நிச்சயமாக இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியா ஒருபோதும் குந்தகம் விளைவிக்கப் போவதில்லை. அதேசமயம், இந்தியாவின் அனுசரணையை மீறி வேறு எந்த வல்லரசு நாடுகளும் இலங்கையில் தலையிடப்போவதில்லை. நிலைமை இவ்வாறு இருக்க இலங்கையின் பிரதேச பாதுகாப்பு அச்சுறுத்தல் தருவது யார் என்பதே கேள்வி. இச்சந்தர்ப்பத்தில், விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களால் விடுக்கப்பட்ட அறிக்கையையும் கவனத்தில் கொள்வது நல்லது. எதிர்வரும் தேர்தலில், சிங்கள மக்கள், தமிழ் மக்களை அரவணைத்துச் செல்ல விரும்புகிறார்களா? அல்லது தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கு பிரிந்து செல்ல விடப்போகிறார்களா, என்பதைத் தீர்மானிக்கட்டும் என ஒரு விழிப்புணர்வுள்ள செய்தியை சிங்கள மக்களுக்கு ஊடகங்கள் மூலம் தெரிவித்துள்ளார். விளைவை விரைவில் நாம் காணக்கூடியதாக இருக்கும் என நம்புகிறோம். ■

---

சமையல் பகுதி:

## அரைத்த மீன்குழம்பு

– பாரதி

*அன்பார்ந்த வாசகர்களே!*

*இன்று பலவிதமான மிளகாய்த்தூள், மக்களை ஆச்சரியப்பட வைக்கும் வகையில் வானொலி, தொலைக் காட்சிகளில் விளம்பரப்படுத்தப்பட்டு விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. சமையலுக்கு எளிதாக தூளைப் போட்டு குழம்பு வைக்கும் நீங்கள் சமயம் கிடைக்கும்போது மிளகாயை அரைத்து அதில் குழம்பு வைத்துச் சுவைத்துப் பாருங்கள். அதன் சுவையே தனி.*

**தேவையான பொருட்கள்:–** காய்ந்த மிளகாய்-20, மல்லி-2 மேசைக்கரண்டி, சீரகம்-1 மே.கரண்டி, மிளகு-10, பூண்டு-6 பல்லு, சின்ன வெங்காயம்-10 அல்லது பெரிய வெங்காயம்-1, மஞ்சள் தூள்-1 சிட்டிகை, தேங்காய்-பாதி, 1 கிலோ - மீன் (விளை, ஒரா, திரளி, சீலா, பாரை), புளி-1 எலுமிச்சம்பழம் அளவு, உப்பு.

**செய்முறை:–** மிளகாயை காம்பு நீக்கி 1 மணிநேரம் தண்ணீரில் ஊறவிடவும். மல்லியையும் ஊறவிடவும். பின் மிக்ஸியில் மிளகாய், மல்லி, சீரகம், மிளகு இவைகளைப் போட்டு சிறிது தண்ணீர் விட்டு அரைக்கவும். பசைபோல் அரைபட்டதும் மஞ்சள் தூள், வெங்காயம், பூண்டு இவைகளைப் போட்டு அரைத்து எடுத்து, கழுவி வைத்த மீன்களில் போட்டு, புளியைக் கரைத்துவிட்டு, அளவான உப்பு போட்டு (மண் சட்டியில் வைத்தால் சுவை கூடும்) கொதிக்க வைக்கவும். கண்டிப்பாக மூடியால் மூடிக் கொதிக்க வைக்கவும். பொங்கி வழியாமல் பார்த்துக் கொள்ளவும். கொதித்து பச்சை மணம் போனபின் தேங்காய்ப்பால் முதல் பால், இரண்டாம் பால் இவைகளை விட்டு 20 நிமிடம் மிதமான தீயில் கொதிக்க விடவும். பின் சோற்றுடன் சேர்த்துச் சாப்பிட்டால் ஊர் நினைவு திரும்பும்.

குறிப்பு– சைவக் குழம்பாக முருங்கைக்காய், வெண்டைக்காயிலும் சமைக்கலாம். சுவை குன்றாது.

## சிறுகதை சிட்டுக்குருவியின் தலையில்

- செந்துமது

*(கவிதை, கட்டுரை, சிறுகதை எனப் படைப்பு ஆற்றலுள்ள 'செந்து மது' தமிழ் - ஆங்கிலம் எனும் இரு மொழிகளிலும் எழுதும் ஆற்றல் பெற்றவர். நாடகம், சினிமா என நடிப்புத்துறை அனுபவங்கள் இவருக்குண்டு. தீவகத்தின் கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தற்போது இலண்டனில் வதிகிறார். - ஆசிரியர்)*

**சோ**மசுந்தரம் அந்த வராந்தாவில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். அவர் மண்டைக்குள் எத்தனையோ திட்டங்கள் தீட்டப்பட்டுக் கொண்டு இருந்தன. ஆனால் எவ்வித சரியான முடிவுக்கும் வரமுடியவில்லை.

போனதடவை தேர்தலில் ஆட்சியை அந்தா - இந்தா என்று கைப்பற்ற - எண்ணிய எண்ணம் கைக்கு எட்டியது போல் தோன்றியது, ஆயினும் வாய்க்கு எட்டாமற் போயிற்று.

அவருடைய முடிவுகளும் செயற்பாடுகளும் சரியாய்த் தான் இருந்தன. உள்ளே இருந்துகொண்டு சிலபேர் முதுகில் குத்திவிட்டார்கள்.

இந்தமுறை எப்படியாவது முறையாகக் களை பிடுங்கி கட்சியைச் சுகாதாரமாய்த்தான் வைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் பிரச்சினைகளோ அவர் எதிர்பார்க்காத வகையில், வேறு வடிவில்... அவர் தொண்டர்கள் மத்தியில் சாதி - சமய இழுபறிகள். தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிற இந்தச் சமயத்தில் - இப்படியான பிரச்சினைகள். சரியாகக் கையாளப்பட்டு, தேர்தலில் வெற்றிவாகை சூடுவது கத்தியின் விளிம்பில் நடக்கும் விளையாட்டு ஆகிவிட்டது. அதனால்தான் அவர் மிகவும் குழம்பிப் போயிருக்கிறார்.

விடிந்தால் நாளை நடக்கவிருக்கும் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பிரச்சினையின் தீர்வுக்கான திட்டங்களை அமுலாக்கிச் சுடச்சுட நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லாவிடில் இந்தமுறையும் வாய்க்கு எட்டாத கதைதான் தொடரும்.

எதிர்க் கட்சித் தலைவர் சோமசுந்தரத்தின் கடைசி மகள் சிவகாமிக்கு வயது ஏழு. அவளுக்கு பாடசாலை விடுமுறைக்காலம். அவளுக்கு பறவைகளிடம் அளவிடற்கரிய பற்று. அதிகாலையில் எழும் பறவைகளின் இன்குரலைக் கேட்கக் காத்திருப்பாள். இதனால் வேளைக்கே எழுந்து விழித்திருப்பாள். பாடசாலைக் காலங்களில் இந்த சுகானுபவங்கள் அவளுக்குக் கிடைப்பதில்லை. பறவைகள் மௌன விரதமாக்கும்.

அன்றும் அதிகாலை எழுந்த சிவகாமிக்கு தந்தையின் சந்தோசம் என்னவென்பது எள்ளளவும் தெரியாது. வழமைபோல் அடுப்பங்கரைக்குச் சென்று அம்மா காய்ச்சி ஆற்றி, டம்ளரில் வைத்திருந்த பாலை அவசர அவசரமாகக் குடித்துவிட்டு, நுரைத்த மீசையுடன் பங்களாவின் பின்புறத் தோட்டத்திற்குச் சென்றுவிட்டாள். அவள் ஒரு சிட்டுக் குருவியின் காதலி. தோட்டத்தில் பறவைகளின் சத்தம் அடங்க, மறுபடியும் சமையற்கட்டுக்குச் சென்று, இரண்டு கைகள் நிறையத் தானியங்களுடன் முன்பக்க முற்றத்துக்கு வந்தாள். அவைகள் அங்கு தலையைச் சரித்து நிமிர்த்தி கீழே பார்த்து பக்கம் பார்த்து, பக்கம் பார்த்து மறுபடியும் மறுபடியும் அதையே செய்து, சின்ன சின்னதாகப் படபடத்துப் பறந்து - இருந்து வேகவேகமாக நடைபோட்டுக் கொண்டு நின்றன. அந்த நான்கு சோடி சிட்டுக் குருவிகளுடன் விளையாடும் தன் மகளைப் பார்த்து விடிகாலை எழுந்திருந்த சோமசுந்தரத்தின் முகத்தில் மெல்லிய பிரகாசம்.

கையில் காப்பியுடன் எதிரே வந்த சிவகாமியின் அம்மாவுக்கு அவரது முகத்தின் பிரகாசம் மகிழ்ச்சியை ஊட்டியது. இல்லாவிட்டால் அவரிடத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு - அதனால் ஏற்படும் எரிச்சலுக்கு தீனியாவது அவள்தான். இன்னும் சிறிது நேரத்தில் கட்சிப் பிரமுகர்கள் வந்துவிடுவார்கள். அவர்களோடு கிளம்பி கட்சி அலுவலகத்திற்குப் போகவேண்டும். அவசர அவசரமாக காப்பியைப் பருகிவிட்டு காலைக்கடன்களை முடித்துவிட்டு வெளிக்கிடத் தயாரானார். அவர் எடுத்துக் கொண்ட முடிவு பொதுக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படக் கூடியதல்ல. அது ஒரு பாதாள உலகத் திட்டம். தனக்கு நம்பிக்கையானவர்களோடு, காதும் காதும் வைத்தது போல் செய்து முடிக்கவேண்டிய விடயம். அதாவது தமது தொண்டர் படையுள் புதிதாகக் கிளப்பிவிடப் பட்டிருக்கும் சாதி - சமயப் பிரச்சினைக்குக் காரணமானவனைத் தீர்த்துக் கட்டிவிடுவது. வராந்தாவில் வந்த அமர்ந்து இருந்த கட்சிப் பிரமுகர்கள் எல்லோரும் எழுந்துநின்று வணக்கம் தெரிவித்தபின், சோமசுந்தரம் முன்னே செல்ல அவரைப் பின்தொடர்ந்து செல்ல ஆயத்தமானார்கள். முற்றத்தில் இறங்கி நடக்க இவர்கள் முயன்றபோது, சிட்டுக்குருவிகளைப் பிடிப்பதற்கு அவர்களின் பின்னே ஓடிவந்த சிவகாமி, தந்தையின் கால்களில் இடறி கீழே விழுந்தாள். அவளைத் தூக்கி நிறுத்திய சோமசுந்தரம் ஒருமுறை விறைப்பாகப் பார்த்துவிட்டு, பின்னர் அவளுக்கு ஒன்றும் நேர்ந்துவிடவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, புன்னகை புரிந்து உச்சிமோந்து தாயிடம் அவளை அனுப்பிவிட்டுச் சென்றார். செல்லும்போது அவர் மனம், தன் மகளின் இடறுதலால் தன் திட்டம் நடைபெறாமல் போகுமோ என்று ஏங்கியது.

இப்படியே தன் திட்டத்தின் கலவரத்தோடு கட்சி அலுவலகத்துள் நுழைந்த சோமசுந்தரத்துக்கு

ஒரு மகிழ்ச்சியான செய்தி காத்திருந்தது. ஆ... இவ ரால் கொல்லப்படவேண்டியவன் உண்மையிலேயே ஒரு விபத்தில் இறந்து போனான் என்பதுதான் அச் செய்தி. இவ்வளவு இலகுவாகப் பிரச்சினை தீரு மென்று சோமசுந்தரம் கனவிலும் எதிர்பார்க்க வில்லை. காலையில் வீட்டை விட்டுக் கிளம்பும் போது சிவகாமி குறுக்கே வந்து மோதிய அந்த நிகழ்வை நினைத்துக் கொண்டார். அதை ஒரு நல்ல சகுனமாகப் பொருத்திக் கொண்டார். அதன்பின் சோமசுந்தரம் வீட்டை விட்டுப் புறப்படும் போதெல் லாம் சிவகாமி முன்னே கொண்டுவரப்பட்டாள். அப்படிப் புறப்பட்டுப் போன காரியங்கள் எல்லாம் வெற்றியில் முடிந்தன. அது ஒரு நல்ல சகுனமான நிரந்தர ஏற்பாடாயிற்று. அந்தச் சின்னஞ்சிறு பிஞ்சு உள்ளத்தில் தான் ஒரு அதிர்ஷ்ட தேவதையென் பதும், வெற்றிகளின் பிறப்பிடம் என்பதும் பதிந்து போயிற்று. தோல்விகளை ஏற்கும் உள்ளம் குழந்தை கட்கு இல்லை அல்லவா. அதன் தாக்கத்தைத் தாங்கும் சக்தியும் அவர்களுக்கு இருக்கமுடியாதே. சோமசுந்தரம் வெளிக்கிடும் போது தன்முன் நிற்கும் சிவகாமிக்கு தன் சட்டைப் பையுள் இருந்து எடுக் கும் கை நிறைந்த சில்லறைகளை அப்படியே வழங்கி விடுவார். சிவகாமி அவற்றை எல்லாம் அவளிட முள்ள அழகான கரடிப் பொம்மை வடிவிலமைந்த உண்டியலில் சேர்க்கலானாள். இப்போ அவளுக்கு விடயங்கள் கொஞ்சம் புரிந்தன.

தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்தது. கூட்டங் கள், பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டன. சுமூகமா கப் போய்க் கொண்டிருந்த தேர்தல் விழாவில் திடீர் திருப்பம். உடையாது என்று நினைத்த கூட்டணிகள் உடைந்தன. கலையாது என்று எண்ணியிருந்த ஓட் டுகள் பிளந்துபோனதால் சோமசுந்தரம் எதிர்பார்க் காத அளவு நெருக்கடிகளை சந்திக்க நேர்ந்தது. முடிவு அவருக்குப் பாதகமாகி படுதோல்வியாக முடிந்தது. அவர் அதிர்ந்து போனார். அந்தச் செய்தி அவர் வீட்டுக்கு அவர் செல்லு முன்பே சென்று விட்டது. வீடே துக்கத்தில் ஆழ்ந்தது. சிவகாமி... அந்த இளம் இதயம் வெற்றிகளை மாத்திரம் கண்டு பழகியது ஆயிற்றே!

சோகத்துடன் துயரப்பட்டு வீட்டிற்குப் போன சோமசுந்தரத்தை இன்னொரு இடி தாக்கியது. அங்கு சிவகாமியைக் காணவில்லை. எல்லோரும் தேடிக் கொண்டிருந்தார்கள். சோமசுந்தரம் இடிந்த உள்ளத்தோடு அவளது அறையை நோக்கி ஓடினார். அங்கே அவள்...? கட்டிலில் அவளது கரடிப் பொம்மை கிடந்தது. அது அவரைப் பார்த்து பிர மாண்டமாகச் சிரிப்பதுபோல் இருந்தது. ■


புதிய பொலிவுடன்

லூசியத்தில்

# கற்பகம்

# Katpakam

**36 Loampit Hill, Lewisham, London SE13 7SW.**

Tel/Fax: 020 8694 8810

ஞாயிறு தோறும் உடன் பங்கு ஆட்டிறைச்சி

சகலவிதமான மரக்கறி வகைகள் பழவகைகள் உட்பட சகல தேவை களுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்.



**தமிழ் ஓலைகள் 2004 Tamil Pages**

தமிழ் உலகத்திற்குத் தனித்துவம் வாய்ந்த தகவல் ஏட்டினை *1994*ம் ஆண்டு முதல் அளித்துவரும் தமிழ் ஒலைகள் நிறுவனம் தமது

BRITISH tamil DIRECTORIES **11** வது

***தமிழ் ஓலைகள் 2004***ஐ வழமைபோல் தமிழ் புத்தாண்டு *14-04-2004*ல் வெளியிடுகிறார்கள். தங்கள் விபரங்கள், விளம்பரங்களை இணைக்க விரும்புவோர் தயவுசெய்து *31-01-2004*க்கு முன்பதாக அனுப்பி வைக்கவும்.

**52, Kingsley Road, Wimbledon, London SW19 8HF.**

**Tel: 020 8543 2126, 020 8942 8745 Fax: 020 8540 3442**

**E-mail: editor@tamilpages.org Web: www.tamilpages.org**

அதிக பிரதிகளை வெளியிட்டு ஐரோப்பாவின் தமிழ் பிரசுரங் களில் நுகர்வோர் தொகையிலும் பிரசுர எண்ணிக்கையிலும் தொடர்ந்து முதல் இடம்பெற்று வருகிறார்கள்.

[தமிழர் தகவலுக்காக]

# ஈரத் தமிழ்

– அறிவுமதி

ஈரம் குடிக்காமல் எது விளையும்?

மண் குடித்த ஈரம் வளம் குவிக்கும். உயிர் குடித்த ஈரம் நலம் குவிக்கும்.

ஈரத்தைப் பேச ஞாயிறு வேண்டும்.

ஞாயிறு உங்களின் பார்வைக்கு வெப்பம்... நெருப்பு... அவ்வளவுதான். ஆனால் அதற்குள்தான் இருக்கிறது உலகின் அனைத்து உயிர்களுக்குமான ஈரம்.

சூடு... அள்ளி நீட்டாமல் நீங்கள் எந்த ஈரத்தையும் கொறிக்க முடியாது.

தளிர்... மொட்டு... இவையெல்லாம் மழையீரத்திலா சிரிக்கின்றன... இல்லை இல்லை ஞாயிற்றின் ஈரத்தில் சிலிர்க்கின்றன...

கொளுத்தும் வெயில் நாளில் ஒரு குரல் வரும்... 'இன்னைக்குக் கட்டாயம் மழ வரும்'. இது அனுபவ உச்சரிப்பு மட்டுமன்று... அறிவியல் உச்சரிப்பும் கூட.

வெப்பம் என்பது ஞாயிறுக்கு. கோபம் என்பது மனிதருக்கு.

ஞாயிற்றின் வெப்பம் மழை கொடுப்பது போல... மனிதரின் கோபம் விடுதலை கொடுக்கும்.

விடுதலையும் ஈரம்தான். அது தனித்த மனிதருக்கான ஈரமன்று. தலைமுறை தலைமுறையாக உரிமை மறுக்கப்பட்ட அடிமைகளுக்கான ஈரம்.

அந்த ஈரம் நுழைந்த மழைத்துளியைப் போல தம் உயிரையும் சிந்த உறுதிகொள்ளும்.

சிந்துதலில்... உதிர்தலில் உலகம் மரணம் பார்க்கும். வீரம் மட்டும்தான் ஈரம் பார்க்கும்.

ஆம்... அதுதான்... அதுமட்டும்தான் சொல்லும்... 'இவள் புதைக்கப்படவில்லை... விதைக்கப்பட்டிருக்கிறாள்' என்று.

விதைகளும் மழைத்துளிகள்தாம். விழ விழ ஒன்றாய்... பத்தாய்... நூறாய் எழுகிற மழைத்துளிகள்.

இந்த மழைத்துளிகள் ஈரப்படுத்தாமல் எந்த மண்ணும் மரியாதை பெறமுடியாது.

அவரவர் மண்ணில்... அவரவர் மழைத்துளிகள் சிந்திச் சிந்தித்தான் வாழ்வின் அழகு வரலாறாகியிருக்கிறது.

எம் வரலாற்றிலும் இது நிகழும். உறுதியாக நிகழும்.

ஏனெனில்... தமிழ் ஈரம் குடித்து விளைந்தது. தமிழ்... ஈரம் கொடுக்க விளைந்தது.

'கொலை வாளினை எடடா

மிகு

கொடியோர் செயல் அறவே'

இது தமிழ் ஈரம் குடித்து விளைந்தது.


'உலகம் உண்ண

உண்

உடுத்த

உடுப்பாய்'

இது தமிழ் ஈரம் கொடுக்க விளைந்தது.




"திருவாசகம்" மல்ரிமீடியா வர்த்தமானன் வெளியீடு முனைவர் அ. அறிவொளியின் விளக்க உரையுடன் திருத்தணி என். சுவாமிநாதன் பாடலிலமைந்தது. இளஞ்சிறார்கள் கணனியில் கேட்டு மகிழக்கூடிய வகையில் ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடியது.

இதற்கான அறிமுக விழா தமிழர் தகவலால் விரைவில் ஏற்பாடு செய்யப்படும்.




அருள்மிகு முத்துமாரி அம்மன் துணை!

# சிவயோகம்
# முத்தமிழ் விழா - 2004

## சிவயோக கலை அரங்கம்

**அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்**

**180-186, Upper Tooting Road, Tooting, London SW17 7EJ.**
**Tel: 020 8767 9881   Fax: 020 8767 2337**

**17-04-2004 சனிக்கிழமை**
***காலை 10.00 மணிமுதல் இரவு 9.30 வரை***
அனுமதி இலவசம்

### காலை நிகழ்வுகள்

ஆரம்பம் - காலை 10.00 மணி
மங்கல விளக்கேற்றல்
தமிழ்த்தாய் வாழ்த்து
தாயக வணக்கம்
திருமதி. கோகிலா தங்கராசா

மங்கல வாத்தியம் - மு.ப. 10.10
ஈழம் நாகேந்திரம் குழுவினர்

ஆரம்ப உரை
திரு. நா. சீவரத்தினம் அவர்கள்
தலைவர், சிவயோகம் அறங்காவலர் சபை

தலைமை உரை - மு.ப. 11.20
திரு. சோ. கனகசுந்தரம் அவர்கள்

போட்டிகளில் வெற்றி பெற்ற முதற் பரிசாளர்களின்
பேச்சு, பண்ணிசை ஆகியன - மு.ப. 11.35

கௌரவிப்பு: புகைப்பட திரை நீக்கம் - பி.ப. 12.15
பேராசிரியர் ELI AZTER
கௌரவம் பகர்வோர்
பண்டிதமணி கணபதிப்பிள்ளை
அன்னை பூபதி
கௌரவ விருது வழங்கல்
வைத்திய கலாநிதி இந்திரா சிவயோகம் அவர்கள்
திரு. ரோ. தாமோதரம் அவர்கள்
திரு. எஸ். ஸ்ரனிஸ்லஸ்

சாதனை பகர்வோர்
திரு. க. ஜெகதீஸ்வரம் பிள்ளை
வைத்திய கலாநிதி சிவகுமார்

பரிசு வழங்கல் - பி.ப. 1.00
போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான
பரிசளிப்பு வைபவம்

மதிய விருந்து - பி.ப. 1.30

### மாலை நிகழ்வுகள்

ஆரம்பம் - பி.ப. 3.00
தலைமையுரை
திரு. சிவகுருநாதபிள்ளை அவர்கள்

மங்கள இசை - பி.ப. 3.15
ஈழம் நாகேந்திரம் குழுவினர்

கவியரங்கம் - பி.ப. 4.45
"நாடு தாய் நாடு"
தலைமைக் கவிஞர்: ஜெகதீஸ்வரம் பிள்ளை
கவிஞர்கள்:
செல்வி. செ. அங்கையற்கண்ணி, வேலணை சிவா,
பாலரவி, மதிவதனா, ப.வை. ஜெயபாலன்

சிறப்புரை - பி.ப. 5.30
இலங்கை வருகையாளர்
திரு. ஆறு. திருமுருகன்

பல்லின வாத்திய விருந்து - பி.ப. 6.15
மிருதங்க ஆசிரியர் திரு. நாதமணி முத்துசிவராசா
சங்கீத வித்வான் திருமதி. கலைவாணி இந்திரகுமார்
ஆகியோரின் மாணவர்கள்

சிறப்புரை - மாலை 7.45
தமிழக வருகையாளர்
முனைவர் அ. அறிவொளி

காவடி நடனம் மாலை 8.30
சிவயோகம் தமிழ் பாடசாலை மாணவர்கள்
நெறியாக்கம் - திரு. துரைசிங்கம் அவர்கள்

நன்றியுரை - இரவு 9.15
திரு. நா. கருணாநிதி (அறங்காவலர்)

இரவு விருந்துடன் விழா நிறைவுறும்.

இந்த மாதத்தில் இருந்து இலண்டனுக்கு மிகவும் அறிமுகமானவரான திரு. வித்தியாகரனின் ஜோதிட பலன்கள் இடம்பெறுகிறது. - ஆசிரியர்

# இம்மாதம் இப்படித்தான் – மார்ச் 2004


- கணித்தவர்: ஜோதிட ரத்னா - லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்

37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை 17. தொலைபேசி: 2434 8877, 24336465 செல்: 94441 171115


**மேடம்:** (அஸ்வினி, பரணி, கிருத்திகை 1ம் பாதம்)

தன்மானம் மிக்கவர்களே! சுக்ர பலம் நிறைந்திருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கணவன் மனைவி உறவு மேம்படும். செலவுகள் கூடும். ஆடம்பரப் பொருட்கள் வாங்குவீர்கள். சொந்த ஊரில் இருந்து நல்ல செய்திகள் வரும். மாதத்தின் மத்திய பகுதிக்குள் அரசு விவ காரங்கள் வெற்றியில் முடியும். கனவுத் தொல்லை விலகும். தொண்டைவலி, அடி வயிற்றில் வலி வந்து விலகும். பிள்ளைகளால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். தந்தைக்கு மருத்துவச் செலவுகள் வந்துபோகும். வீடு வாகனம் மாற்றுவீர்கள். பண வரவு சுமாராக இருக்கும். சகோதர வகையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு பின்னர் நிலைமை சுமூகமாகும். வியாபாரத்தில் மாதத்தின் பிற்பகுதியில் புது ஒப்பந்தங்கள் வரும். போட்டிகளை போராடி சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் செல்வாக்குப் பெருகும். சக ஊழியருடன் இருந்த மோதல் போக்கு விலகும். கல்யாணப் பேச்சுவார்த்தை சுமூகமாக முடியும். காதல் இனிக்கும். மாணவர்கள் விடைகளை எழுதிப்பார்ப்பது நல்லது. ஷேர் லாபம் தரும். நண்பர்களிடம் வரம்புமீறிப் பேசவேண்டாம். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பெரியோரின் ஆசி கிட்டும். குழப்பங்களிலிருந்து விடுபட்டு குதூகலம் அடையும் மாதமிது.

அட்டமத்தில் சந்திரன்: 12, 13 ஆம் திகதிகளில் எதிலும் கவனம் தேவை.

இராசியான எண்கள்: 1, 6 நிறங்கள்: மெருண், வெள்ளை

**இடபம்:** (கிருத்திகை 2,3,4ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1,2ம் பாதங்கள்)

இரவு, பகல் பாராமல் உழைப்பவர்களே! சூரியன் வலுவாக நிற்பதால் மனோபலத்துடன் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். அரசால் ஆதாயம் உண்டாகும். பயணங்களும், வீண் விரயங்களும் அதிகரிக்கும். மனைவியின் உடல்நலம் பாதிக்கும். மாதவிடாய்க் கோளாறு வந்து போகும். மகனுக்கு வேலை கிடைக்கும். மகளுக்கு கல்யாணப் பேச்சுவார்த்தைகள் சுமூகமாக முடியும். உறவினர்கள், நண்பர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். வாகனச் செலவு, வாகன விபத்து நிகழக்கூடும். இரவு நேரத் தொலை தூரப் பயணம் தவிர்ப்பது நல்லது. முன்கோபம், மறதி வந்து போகும். கட்டிட வேலை முடியும். சொத்து மாற்றம் சுமூகமாக முடியும். பழைய வேலையை விடுத்து புது வேலையில் சேர்வீர்கள். மூத்த அதிகாரிகளின் ஆதரவு பெருகும். சம்பளப் பாக்கி கைக்கு வரும். புது யுக்திகளைக் கையாண்டு பழைய பாக்கிகளை வசூலிப்பீர்கள். ஏற்றுமதி, இறக்குமதி வகைகள் லாபம் தரும். மாணவர்கள் கெட்ட நண்பர்களிடமிருந்து விடுபடுவார்கள். விளையாட்டில் பதக்கம் பெறுவார்கள். யாருக்காகவும் எதிலும் கையெழுத்திட வேண்டாம். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். வெற்றியின் விளிம்பைத் தொடும் மாதமிது.

அட்டமத்தில் சந்திரன்: 14, 15 ஆம் திகதிகளில் எதிலும் நிதானம் தேவை.

இராசியான எண்கள்: 1, 5 நிறங்கள்: ரோஸ், கிரே

**மிதுனம்:** (மிருகசீரிடம் 3,4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் பாதங்கள்)

இதமாகப் பேசும் மிதவாதிகளே! உங்களின் ராசிக்குள்ளேயே சென்று கொண்டிருக்கும் சனி உடல் அசதி, காரியத் தடை, விரக்தி என ஒருபுறம் விரும்பத்தகாத பலன்களைத் தந்தாலும் புதன், சுக்ரன் சாதகமான வீடுகளில் சஞ்சரிப்பதால் உங்களின் நீண்டகால ஆசைகளெல்லாம் இந்த மாதத்தில் நிறைவேறும். மனைவி, மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். ஆடை, அணிகலன்கள் வந்து சேரும். வாகனம் வாங்குவீர்கள். கனவுத் தொல்லை விலகும். வயிற்றுக் கோளாறு தீரும். அரசாங்க காரியங்கள் உடனே முடியும். அயல்நாட்டுப் பயணம் வெற்றியில் முடியும். கணவன் மனைவி உறவு இனிக்கும். பிள்ளைகளில் உத்தியோக கல்யாண விஷயங்கள் சிறப்பாக முடியும். சொத்து சிக்கல்கள் தீரும். கொடுக்கல் வாங்கல் சுமூகமாக இருக்கும். கௌரவப் பதவிகள் தேடி வரும். சகோதரருடன் இருந்த மோதல் விலகும். புதுவியாபாரம் தொடங்குவீர்கள். புது முதலீடுகள் செய்வார்கள். வேலையாட்களால் பிரச்சினை வந்துபோகும். உத்தியோகத்தில் நிர்வாகத் திறமை கூடும். சக ஊழியர்களுடன் இருந்த சண்டை விலகும். மாணவர்களின் நினைவாற்றல் கூடும். கமிஷன், ஷேர், ஏஜென்சி வகைகள் லாபம் தரும். கனவுகள் நனவாகும் காலமிது.

அட்டமத்தில் சந்திரன்: 16, 17 ஆம் திகதிகளில் எதிலும் கவனம் தேவை.

இராசியான எண்கள்: 5, 6 நிறங்கள்: சில்வர்கிரே, பிஸ்தா பச்சை

**கடகம்:** (புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)

கடமை தவறாதவர்களே! கண்காணிக்கும் குணம் உள்ளவர்களே! அங்காரகனின் பலம் அதிகமாக இருப்பதால் மனஉளைச்சல் குறையும். வரவேண்டிய இடத்திலிருந்து பணம் வரும். பெரிய திட்டங்களெல்லாம் தீட்டுவீர்கள். குரு வக்ரமாகி நிற்பதால் செலவுகள் கூடும். குடும்பத்திலும் கணவன் மனைவிக்குள் வாக்கு வாதம் வந்து போகும். உறவினர்கள், நண்பர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். வீடு, மனை வாங்குவது, விற்பதில் இருந்த தடைகள் விலகும். அரைகுறையாக நின்ற வீடு கட்டும் பணியை முடிப்பீர்கள். அரசு விவகாரங்களில் கவனம் தேவை. கடன் வாங்கி வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். தேங்கிய சரக்குகள் விற்றுத் தீரும். புது சலுகைகள் அறிவிப்பீர்கள். அனுபவம் வாய்ந்த பணியாட்கள் வந்து சேர்வார்கள். அக்கம் பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வேற்றுமதத்தினர் உதவுவார்கள். உத்தியோகத்தில் வீண் பழியிலிருந்து விடுபடுவீர்கள். வேலைப்பளுகுறையும். யாரையும் நேரடியாக விமர்சிக்க வேண்டாம். மாணவர்கள் போட்டிகளில் வெல்வார்கள். திருமணப் பேச்சில் முன்னேற்றம் உண்டாகும். நண்பர்கள், பிரபலங்களில் புகழப்படுவீர்கள். ஷேர்லாபம்தரும். மனஇறுக்கம்விலகி மகிழ்ச்சிகூடும் மாதமிது.

அட்டமத்தில் சந்திரன்: 18 முதல் 19, 20 ஆம் திகதிகளில் மாலை 6.00 மணிவரை கவனம் தேவை.

இராசியான எண்கள்: 4, 9 நிறங்கள்: வெளிர்நீலம், பிங்க்

**சிம்மம்:** *(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)*



சமய சந்தர்ப்பம் பார்த்து காரியம் சாதிப்பதில் வல்லவர்களே! உங்களின் மனோபலம் கூடும். ஒன்பதில் நிற்கும் சுக்கிரன் எதிர்பாராத பணவரவு, உல்லாசப் பயணங் கள், ஆன்மீகப் பயணங்களைத் தருவார். ஆடை, அணி கலன்கள் வந்துசேரும். கணவன் மனைவிக்குள் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்தாலும் குடும்ப ஒற்றுமை பாதிக் காது. மனைவி வழி உறவினர்களின் சுபகாரியங்களில் கலந்து கொள்வீர்கள். விகடகவியாகப் பேசுவீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மகான்களைச் சந்திப்பீர்கள். வாகனப் பழுது நீங்கும். எதிரிகளை இனங்கண்டறிந்து ஒதுக்குவீர்கள். ஷேர் லாபம் தரும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உய ரும். ஆனால் மறைமுகப் போட்டிகள் கடுமையாக இருக்கம். ஏற்றுமதி, இறக்குமதி, மருந்து, உணவு வகைகள் லாபம் தரும். தந்தைக்கு மருத்தவச் செலவுகள் வந்து போகும். பயணங் களின்போது கவனம் தேவை. மறதி ஏற்படும். உத்தியோகத் தில் பயம் விலகும். கூடுதல் சலுகை மாதப் பிற்பகுதியில் கிடைக்கும். சம்பளப்பாக்கி கைக்கு வரும். மாணவர்கள் விடைகளை எழுதிப் பார்ப்பது நல்லது. கணிதப் பாடத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். முயன்று தவறி முன்னேறும் மாதமிது.

*அட்டமத்தில் சந்திரன்: 20 ஆம் திகதி மாலை 6.00 மணி முதல் 21, 22 ஆம் திகதி வரை எதிலும் கவனம் தேவை.*

*இராசியான எண்கள்: 5, 9*   *நிறங்கள்: பிங்க், வெள்ளை*

**கன்னி:** *(உத்திரம் 2,3,4ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2ம் பாதங்கள்)*




கலகலப்பாகப் பேசி அனைவரையும் கவர்பவர்களே! அடுத்தடுத்து விரையச் செலவுகள் அதிகரிக்கும். சிலரின் சுயநலப் போக்கையும், சிலரின் நன்றி கெட்ட போக்கையும் பார்த்துக் கவலை அடைவீர்கள். பணத்தட்டுப்பாடு அதிக ரிக்கும். மறைமுக எதிரிகளால் மனக்கலக்கம் அடைவீர்கள். யாருக்காகவும் ஜாமீன், காரெண்டர் கையெழுத்திட வேண் டாம். தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். விபத்துகள் நிகழக்கூடும். கவனம் தேவை. கணவன் மனைவிக்குள் விட் டுக் கொடுத்துப் போவது நல்லது. பழைய கசப்பான சம்ப வங்களைச் சுட்டிக்காட்டிப் பேசவேண்டாம். அனாவசிய, ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நல்லது. பிள்ளை களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் தேங்கிக் கிடந்த சரக்குகளை கழிவு விலையில் விற்பீர்கள். கூட்டுத் தொழிலில் சலசலப்புகள் வந்து போகும். உத்தியோ கத்தில் மறைமுக எதிர்ப்புகள் எழும்பும். வேலைப்பளு கூடும். தந்தையின் உடல்நலம் பாதிக்கும். வழக்குகள் கவலை தரும். மாணவர்களுக்கு கை காலில் காயங்கள் வந்து போகும். நின்று, நிதானித்து செயல்பட வேண்டிய மாதமிது.

*அட்டமத்தில் சந்திரன்: 23, 24, 25 ஆம் திகதிகளில் நண்பகல்வரை எதிலும் கவனம் தேவை.*

*இராசியான எண்கள்: 1, 5*   *நிறங்கள்: மெரூண், கிரே*

**துலாம்:** *(சித்திரை 3,4ம் பாதம், ஸ்வாதி, விசாகம் 1,2,3ம் பாதங்கள்)*



துன்பங்களால் துவளாதவர்களே! எங்கும், எதிலும் நிதா னத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. புதன் நீசமாகி நிற்பதால் பேச்சிலும், செயலிலும் உணர்ச்சியைக் கொட்ட வேண் டாம். செலவுகளும், பயணங்களும் துரத்தும். எதிர்பாராத மருத்துவச் செலவுகளும், கருத்து வேறுபாடுகளும் வெடிக் கும். மாதவிடாய்க் கோளாறு, தலைசுற்றல் மனைவிக்கு வந்து செல்லும். பிள்ளைகள் கவலைப்படும்படி நடந்து கொள்வார்கள். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. விலையுயர்ந்த ஆபரணங்களை இரவல் தரவோ, வாங்கவோ வேண்டாம். வழக்குகள் தாமதமாகும். பிரபலங் களின் நட்பு கிட்டும். வியாபாரத்தில் பற்று வரவு மோச மாகும். பழைய கடன் பிரச்சினை கவலை தரும். கூட்டு வியாபாரத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உங்களின் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் தடைப்பட்டு கிடைக்கும். கல்யாணப் பேச்சுவார்த்தை தடைப்படும். மாணவர்கள் கெட்ட நண்பர்களை ஒதுக்கிவிடுவது நல்லது. பணவிர யத்தில் கறாராக இருங்கள். உடன்பிறந்தவர்களால் உபத்தி ரவம் வந்துபோகும். ஷேர் மாதப் பிற்பகுதியில் லாபம் தரும். போலிகளை ஒதுக்கித் தள்ளும் மாதமிது.

*அட்டமத்தில் சந்திரன்: 25 ஆம் திகதி நண்பகல் முதல் 26, 27 ஆம் திகதிவரை நிதானம் தேவை.*

*இராசியான எண்கள்: 6, 8*   *நிறங்கள்: நீலம், வெள்ளை*

**விருச்சிகம்:** *(விருச்சிகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை)*




கவரிமான்களே! கலை நுணுக்கம் உடையவர்களே! உங் களின் இராசிநாதன் இந்த மாதத்தின் மத்திய பகுதியில் இருந்து வலுவடைகிறார். இதனால் தைரியமான முடிவு களை எடுப்பீர்கள். வி.ஐ.பி.கள் உதவுவார்கள். நேரெதிர் வாதங்களைத் தவிர்த்துவிடுங்கள். சிலர் உங்களை கோப மூட்டி வார்த்தையை பிடுங்குவார்கள். மனைவியின் உடல் நலம் பாதிக்கும். கர்ப்பிணிப் பெண்கள் பயணங்களைத் தவிர்க்கவும். பணவரவு சுமாராக இருக்கும். புது கடன் கிடைக்கும். வழக்குகளில் நெருக்கடி விலகும். பிள்ளைகளின் சமயோசித புத்தி வளரும். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவார்கள். வியாபாரத்தில் எச்சரிக்கையாக இருங்கள். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை உடனே செலுத்தி விடுங்கள். பணியாட்களிடம் வியாபார ரகசியங்களைக் கூற வேண்டாம். உத்தியோகத்தில் முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை. மாணவர்கள் வீண் பொழுது போக்குகளைத் தவிர்ப்பது நல்லது. வாகனச் செலவு அதிகமாகும். விபத்து வந்து போகும். ஷேர், லாட்டரி லாபம் தராது. அடி வயிற்றில் வலி வரும். பழங்கள் அதிகம் சாப்பிடுங்கள். உறவினர், நண்பர்கள் தொல்லை தருவார்கள். போராடி முன்னேறும் மாதமிது.

*அட்டமத்தில் சந்திரன்: 1, 2, 28, 29 ஆம் திகதிகளில் நிதானம் தேவை.*

*இராசியான எண்கள்: 3, 4*   *நிறங்கள்: மஞ்சள், ஊதா*

**தனுசு:** *(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம்)*



தராதரம் அறிந்து பழகுபவர்களே! சுக்ரனும், செவ்வாயும் வலுவான இடங்களில் உலவுவதால் உங்களின் ஆசைகள் நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். புது முயற் சிகள் வெற்றி தரும். பிரபலங்களின் உதவி கிடைக்கும். ஆனால் குருவின் வக்ரமும், சனியின் பார்வையும் உங்களை புலம்ப வைக்கும். பத்து ரூபாயில் முடிக்க வேண்டிய காரியத்தை நூறு ரூபாய் செலவு செய்தும் இழுபறியாக முடியும். கணவன் மனைவி உறவு சுமாராக

இருக்கும். பிள்ளைகளிடையே காழ்ப்புணர்வும், பிடிவாத குணமும் அதிகம் காணப்படும். யாரையும் எதிர்பார்த்து முதலீடு செய்ய வேண்டாம். வியாபாரம் போட்டிகள் வலுவாக இருக்கும் புது முதலீடுகள் விரிவாக வேண்டாம். கூட்டாக தொழில் செய்பவர்களிடையே சந்தேக மனப் பான்மை தலைதூக்கும். உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள். நிலப் பிரச்சினை தீரும். ஒரு சொத்தை விற்று மற்றொரு சொத்து வாங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் புகழ் ஓங்கும். புது வாய்ப்புகள் ஏற்றுக் கொள்ளலாம். கல்யாணப் பேச்சு சுமூகமாக முடியும். ஷேர் லாபம் தரும். புது நண்பர்கள் உதவுவார்கள். மாணவர்கள் அறிவியல் பாடத் தில் அதிகக் கவனம் செலுத்துவது நல்லது. ஆற்றிலொருகால் சேற்றிலொருகாலாக நிற்கும் மாதமிது.

*அட்டமத்தில் சந்திரன்: 3, 4, 30, 31 ஆம் திகதிகளில் நிதானம் தேவை.*

இராசியான எண்கள்: 7, 9 நிறங்கள்: ப்ரௌண், ஆரஞ்சு

**மகரம்:** (உத்திராடம் 2,3,4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ம் பாதங்கள்)

மனச்சாட்சிக்கு மதிப்பளிப்பவர்களே! சுக்ர, சனி பலம் சிறப்பாக உள்ளதால் உங்களின் புகழ், கௌரவமெல்லாம் கூடும். பிரிந்த குடும்பங்களை சேர்த்து வைப்பீர்கள். தன் அனுபவங்களைக்கூறி மற்றவர்களை நல்வழிப்படுத்துவீர்கள். 15 ஆம் திகதி முதல் எதிர்பார்த்த காரியங்கள் விரைவாக முடியும். வரவேண்டிய பணம் கைக்கு வரும். ஷேர், ஸ்பெகுலேஷன் லாபம் தரும். புண்ணியப் பயணங்கள் செல்வீர்கள். பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு வேண்டிய முக்கிய திட்டமொன்றை நிறைவேற்றுவீர்கள். மனைவி, பிள்ளைகள் ஆசைப்பட்டதை முடிப்பீர்கள். நண்பர்கள், உறவினர்களில் சிலர் இப்போதுதான் உங்களின் தியாக மனசைப் புரிந்து கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். ஏஜென்சி, டிரேடிங் லாபம் தரும். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் நெருக்கடி விலகும். மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். மாணவர்களின் எழுத்துத் திறமை கூடும். ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவார்கள். சகோதரி உதவுவார். வழக்குகள் சாதகமாகும். அரசால் ஆதாயம் உண்டு. திருமணப் பேச்சு வெற்றி தரும். உற்சாகமுடன் சாதிக்கும் மாதமிது.

*அட்டமத்தில் சந்திரன்: 5, 6, 7 ஆம் திகதி மதியம் 2.00 மணிவரை கவனம் தேவை.*

இராசியான எண்கள்: 5, 6 நிறங்கள்: கிளிப்பச்சை, சந்தனநிறம்

**கும்பம்:** (அவிட்டம் 3,4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3ம் பாதங்கள்)

கொடை வள்ளல்களே! புதுமை விரும்பிகளே! மாதத்தின் மத்தியிலிருந்து உங்கள் ராசியை விட்டு சூரியன் விலகுவதால் உடல்நலம் சீராகும். முன்கோபம் விலகும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். தடைப்பட்ட அரசு விஷயங்கள் உடனே முடியும். மனோபலம் கூடும். குழம்பிய, குழப்பிய காரியங்களில் ஒரு தெளிவு பிறக்கும். மனைவியின் போக்கில் நல்ல மாற்றம் வரும். பிள்ளைகளிடம் அதிகம் எதிர்பார்க்க வேண்டும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். பணவரவு இருந்தாலும் செலவுகளை கட்டுப்படுத்த முடியாது. பயணங்களால் பயனுண்டு. புது நண்பர்கள், உறவினர்கள், வேற்று மதத்தினர் உதவுவார்கள். வியாபாரத்தில் எலக்ட்ரானிக்ஸ், உணவு வகைகள் ஆதாயம் தரும். கூட்டுத் தொழிலில் சல சலப்புகள் இருந்தாலும் லாபம் பாதிக்காது. உத்தியோகத்தில் நெருக்கடி விலகும். உங்களுக்கெதிரான குற்றச் சாட்டுக்களிலிருந்து விடுபடுவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகமாகும். உடன்பிறந்தவர்களால் மன உழைச்சலும், அலைச்சலும் வந்து போகும். வீடு மாறுவீர்கள். புதுவாகனம் வாங்குவீர்கள். தெய்வப் பிரார்த்தனை நிறைவேற்றுவீர்கள். அம்மாவின் உடல்நலம் பாதிக்கும். துணிந்து போராடி வெற்றி பெறும் மாதமிது.

*அட்டமத்தில் சந்திரன்: 7 ஆம் திகதி மதியம் 2.00 மணிமுதல் 8, 9 ஆம் திகதிவரை நிதானம் தேவை.*

இராசியான எண்கள்: 4, 6 நிறங்கள்: வெளிர் நீலம், மெருண்

**மீனம்:** (பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

பகைவனையும் மன்னிக்கும் பரந்த மனசுக்காரர்களே! இந்த மாதத்தின் மத்தியிலிருந்து செவ்வாய் தைரிய ஸ்தானத்தில் நுழைகிறார். அதுமுதல் பயம் விலகும். தூக்கமின்மை விலகும். எதிர்பார்த்த இடங்களிலிருந்து பணம் வரும். உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகமாகும். ஷேர், லாட்டரி லாபம் தரும். 14 ஆம் திகதி முதல் ராசியிலேயே சூரியன் சஞ்சரிக்க உள்ளதால் உடல் சூடு அதிகமாகும். அடி வயிற்றில் வலி வந்துபோகும். கண் எரிச்சல் வரும். சொத்துக்கள், வாங்குவது, விற்பது லாபமாக முடியும். வி.ஐ.பி.களின் நட்பு கிட்டும். வீண் அலைச்சல் குறையும். அம்மாவிற்கு நரம்புக் கோளாறு, அலர்ஜி வந்து போகும். வியாபாரத்தில் எதிர்ப்புகள் குறையும். புது அணுகு முறைகளால் புது வாடிக்கையாளர்களை கவர்வீர்கள். அரசால் மறைமுகத் தொல்லைகள் வரும். பற்றுவரவு உயரும். உத்தியோகத்தில் உங்களை வீழ்த்த திட்டமிட்டவர்களின் சதியை வெற்றி காண்பீர்கள். மின்சாதனங்கள், எலக்ட்ராணிக்கல் சாதனங்கள் புதிதாக வாங்குவீர்கள். மாணவர்கள் அலட்சியமாக இருக்கவேண்டாம். விடைகளை எழுதிப் பாருங்கள். தடைகளைத் தாண்டி முன்னேறும் மாதமிது.

*அட்டமத்தில் சந்திரன்: 10, 11 திகதிகளில் எச்சரிக்கையாக செயல்படுங்கள்.*

இராசியான எண்கள்: 6, 9 நிறங்கள்: இளஞ்சிவப்பு, கிறீம் வெள்ளை



**பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை நடைபெறும் மாசி மகாமகம் மாசி மாதம் 2004ல் கும்பகோணத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.**

AmmA

# அம்மா

**modern asian cuisine**
**fully Licenced Bar & Restaurant**

*MODERN INDIAN & SRI LANKAN RESTURANT & TAKEAWAY*

*90 இருக்கைகள் கொண்ட குளிரூட்டப்பட்ட உணவகம்*

தரம், சுவை, அன்பான உபசரிப்பு
என்றாலே அது இன்று அம்மா ஆகிவிட்டது...

## அம்மா 020 8772 7146

**7 Days 11.00 am - 12.00 Midnight**

*Mother's cooking is the best cooking in the world, so let Amma to cook for you.*

## 138 Mitcham Road, Tooting SW17 9NH

**Tel: 020 8772 7146 Fax: 020 8682 0077**

***£15 பவுண்களுக்கு மேல் உணவு அருந்தி 10 வீத கழிவைப் பெறுங்கள்***

*WE DO NOT ACCEPT CREDIT CARD UNDER £5.00*

*With guranteed bankers card only*

# புதினம்
# *PUTHINAM*

மாதம் இருமுறை லண்டன் தமிழர்களின்
அபிமான இலவசப் பத்திரிகை

**38 MOFFAT ROAD, TOOTING, LONDON SW17 7EZ**
**TEL: 020 8767 8004 FAX: 020 8767 7866**

## நவீனத்துவமான வணிக விளம்பரங்களுக்கு...

இதோ விரைவாகவும், தெளிவாகவும், நினைவில் நிற்கும் தன்மையுமான சினிமாத் தொழில் கலந்த விளம்பரங்கள். ஐரோப்பிய வணிக நிறுவனங்களுக்கான புதிய-நவீன-கணனித்துவ (Graphics) தொழில்நுட்ப முன்னோடியான அமைப்புக்களைக் கொண்டது. உங்கள் தொழில்களை உருவாக்கவும், உயர்த்தவும் எமது நிறுவனத்தை நாடுங் கள். உத்திகளுடன் உற்சாகமூட்டும் எமது விளம்பர உருவாக்கத்தை ஒருமுறை பரீட்சியுங்கள். உண்மையை உணர்வீர்கள்!

விபரங்கட்கு:- தொலைபேசி: **020 8697 7843**

## ஏற்றுமதி - இறக்குமதிக்காக...

எமது நிறுவனம் இந்தியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளில் இருந்து இந்தியாவுக்கும் பலவித பொருட்களையும் ஏற்றுமதி - இறக்குமதி செய்விக்கின்றது. திருமணத் தேவைகள், வணிகத் தேவைகள், ஆலயங்களுக்கான சிலைகள், விக்கிரகங்கள், கலைப் பொருட்கள், ஆராதனைக்கான திரவியங்கள், ஓவியங்கள் உட்பட அனைத்திற்கும் தொடர்புகொள்க. துரித சேவையும், விரிந்தபணிகட்காகவும் எம்மிடம் வாருங்கள்.

தொடர்புகட்கு:- தொலைபேசி: **020 8697 7843**

## திருமுருகன் அறிவகம்:

கீழ்க்காணும் ரமணிச்சந்திரனின் நூல்களும் ஏனைய யாவும் விற்பனைக்காக உள்ளன. தயவுசெய்து தமிழர் தகவல் அலுவலகத்துடன் தொடர்புகொள்க.

ரமணிச்சந்திரனின் நூல்கள்:—

| | |
|---|---|
| 1. என்ன என்ன ஆசைகளோ! | £ 2.25 |
| 2. என் உயிரே கண்ணம்மா | £ 1.75 |
| 3. வைரமலர் | £ 2.50 |
| 4. மெல்லத் திறந்தது கனவு | £ 2.90 |
| 5. பொன்மகள் வந்தாள் | £ 2.00 |
| 6. நாளை வரும் நிலவு | £ 2.25 |
| 7. என் கண்ணில் பாவையன்றோ | £ 2.00 |
| 8. பானுமதி | £ 1.75 |
| 9. இது ஓர் உதயம் | £ 1.75 |
| 10. கிழக்கு வெளுத்ததம்மா | £ 2.25 |
| 11. நாள் நல்ல நாள் | £ 2.50 |
| 12. உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா | £ 2.25 |
| 13. தண்ணீரிலே தாமரைப்பூ | £ 2.00 |
| 14. ராமன் தேடிய சீதை | £ 2.00 |
| 15. நின்னையே ரதி என்று | £ 1.75 |
| 16. ஒரு மலர் | £ 2.25 |
| 17. நிலாகாயும் நேரம் | £ 2.50 |
| 18. பொங்கட்டும் இன்ப உறவு | £ 2.75 |
| 19. பால்நிலா | £ 3.00 |
| 20. இனிவரும் உதயம் | £ 2.00 |
| 21. புன்னகையில் ஒரு உலகம் | £ 2.25 |
| 22. பூங்காற்று | £ 2.00 |
| 23. நாள் நல்ல நாள் | £ 2.50 |
| 24. அடிவாழை | £ 2.50 |
| 26. பொழுது விடிகிற வேளையிலே | £ 2.00 |
| 27. மாலை மயங்குற நேரம் | £ 2.50 |
| 28. தூய சுடர் வானொளியே | £ 1.75 |
| 29. கற்பனையோ அற்புதமோ | £ 2.50 |

ஏனைய நூல்கள்:—

| | |
|---|---|
| 1. அதிர்ஷ்ட விஞ்ஞானம் | £ 5.00 |
| 2. லிப்கோ டிக்ஷனரி (பெரியது) | £ 5.00 |
| 3. பாரதியார் கவிதைகள் | £ 3.00 |
| 4. திருக்குறள் (மு. வரதராஜன் உரை) | £ 1.00 |
| 5. திருக்குறள் (தமிழ்-ஆங்கிலம் இருநூல்கள்) | £12.00 |
| 6. தொல்காப்பியப் பூங்கா (கலைஞர் உரை) | £ 12.00 |

# வை.கோ. வரவு!

கடைசிப்பக்கம்



அரசியல்வாதிகள் என்றால் ஊழல், ஒழுக்கக்கேடு, வாரிசு வளர்ப்பு, சொத்துச் சேர்ப்பு, மதவெறி, சாதிவெறி என்று மலிந்துகிடக்கும் நாட்டில் - சினிமாவில் மயங்கிக் கிடக்கும் ஒரு சமூகத்தில் இப்போது வை.கோ. என்றொரு மறவனைப் பார்க்கிறோம். வரலாற்றை மாற்றும் தலைவராக, வார்த்தையில் வழுக்காதவராக அவர் நிமிர்ந்து நிற்கிறார். நீதி மன்றத்தில், அவர் வெளியே சொன்னதை மறுத்ததுமில்லை, மாற்றி வார்த்தை ஜாலம் புரிந்ததுமில்லை. இது இந்திய அரசியலில் ஒரு புதிய அத்தியாயம். 580 நாட்கள் சிறைவாழ்வு. 60,000 பேர் வரையில் சந்திப்பு, 15000 கடிதங்கள் எழுதியமை, 48600 கிலோ மீற்றர்கள் அலைக்கழிப்பு. இவைகளுக்கிடையே வை.கோ. சிங்கமாகச் சிலிர்த்துக் கொண்டு எழுந்து வந்திருக்கிறார். இதுவரை சிறைவாழ்வில் இத்தனை சாதனைகளை எந்த அரசியல்வாதியும் அங்கு புரிந்ததில்லை. நீதிமன்றத்தில் இப்படிக் கர்ஜித்ததுமில்லை. "மேடை இல்லை. மைக் இல்லை... சால்வைகள் மாலைகள் இல்லையே தவிர, பொடா நீதிமன்றத்தையே தான் முழங்கும் மேடையாக்கிவிட்டார் வை.கோ. தேர்ந்தெடுத்த வார்த்தைகளை அடிவயிற்றில் இருந்து எழும்பும் குரலால் வை.கோ. உச்சரித்தபோது நீதிமன்றத்தில் திரண்டிருந்த தொண்டர்கள் உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீர் விட்டனர். நீதிமன்ற வரலாற்றில் புதுமையானதொரு காட்சி அது" இப்படி ஒரு நிருபர் எழுதியிருக்கிறார்.

"இதுவரை இருபத்திநான்கு தடவைகள் சிறை சென்றிருக்கிறேன். ஒருதடவை கூட ஜாமீன் மனுப் போட்டதில்லை. இந்தத் தடவைதான் போடுகிறேன்." என்று தன்னை நொந்துகொள்ளும் வை.கோ. நம்முன் மனிதாபிமானமாக உயர்ந்து நிற்கிறார்.

"விடுதலைப்புலிகள் தமிழர் உரிமைக்காக ஆயுதப் போராட்டம் நடத்தினார்கள். இப்போது அங்கு அமைதிப் பேச்சுத் தொடர்கிறது. அதை இந்தியாவும் வரவேற்றிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் பேசும் நான் புலிகளைப் பற்றிப் பேசாமல் எப்படித் தவிர்க்க முடியும்?" என்று தன் எதிர்காலத்தின் குறிக்கோளை நீதி மன்றத்தில் மறைவின்றிப் பேசிய வை.கோ.வை எப்படிப் பாராட்டினாலும் தகும்.

1993ல் அவரது ம.தி.மு.க. தோன்றுவதற்கே ஈழத்துத் தமிழர்கள்தான் காரணமானார்கள். தி.மு.க.வின் வாரிசு அரசியல் வக்கிரமானபோது, அவரது ஈழத்தமிழர் பற்றிய உணர்வையே அவர்கள் குற்றம் கண்டார்கள், வெளியேற்றவும் செய்தார்கள். ஆயினும் முரசொலி மாறன் போன்றவர்கள் இறுதிவரை அவரை மறக்கவேயில்லை. இன்று தி.மு.க., வை.கோ. என்ற நட்சத்திரப் பேச்சாளரையே நம்பிக் கிடக்கிறது. "அவரைத் தி.மு.க.வில் பலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் அவர்தான் இந்தத் தேர்தலில் வலுவான பேச்சாளர் என்பதை நாங்கள் உணர்கிறோம்" என்று தி.மு.க. முன்னணித் தலைவர் ஒருவர் மனம் திறந்து சொல்லியிருக்கிறார். இப்படியான ஊகங்களின் பின்பும் "ம.தி.மு.க. என்றும் தனிக்கட்சியாகவே இருக்கும். எங்கும் போய்ச் சங்கமமாகாது" என்று தனித் தன்மையுடன் சொல்லிவருவது அவர் தன்மானத் தலைமையை உணர்த்துகிறது. கலைஞர் மு.க. தன் முரசொலி ஏட்டில் "என்னை அறிந்த நீ அறிவாய்; வேறு உன்னைத்தவிர யார் அறிவார் இந்த உண்மை!" என்று எழுதுகிறார். இது வை.கோ.வின் பெருமைக்குச் சான்று.

"நேற்று, இன்று சரி நாளையும் விடுதலைப் புலிகளை ஆதரிப்பீர்களா?" இப்படிக் கேட்ட நீதிபதியைப் பார்த்து, தன் தோளில் புரண்ட கறுப்புச் சால்வையை கம்பீரமாக இழுத்துவிட்டுக் கொண்டு சடக்கென்று மூக்குக் கண்ணாடியைக் கழற்றிய வை.கோ; "நான் நின்று நிதானித்து நன்றாகச் சிந்தனை செய்து தான் இதைச் சொல்கிறேன். நான் சராசரி அரசியல்வாதியல்ல - சொன்னதை மாற்றிச் சொல்வதற்கு" என்கிறார். எந்த அரசியல்வாதியும் இன்று இவருக்கு இணையல்ல என்பதற்கு இது ஒரு உதாரணம்.

பத்தொன்பது மாதங்கள் அவர் சிறையில் இருந்தாலும் அவரது கட்சியை தளம்பாது வழிநடத்தியிருக்கிறார். ஒருதொண்டன்தானும் தவறாக எதையும் செய்து சட்டத்துள் மாட்டிக் கொண்டதில்லை. அப்படி மாட்டிக் கொண்டிருந்தால், வை.கோ. நீதிமன்றத்தில் ஒரு வன்முறையாளராகச் சித்தரிக்கப்பட்டிருப்பார். ஆட்சியாளர்கள் அதைத்தான் எதிர்பார்த்தார்கள். பத்தாண்டுகள் அவரது ம.தி.மு.க ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தியிருக்கிறது. இதுவரை எந்த வன்முறையும் நடந்ததாக வரலாறில்லை. தமிழகக் காவற்றுறையிடம் அதுபற்றிய ஒரு குறிப்புக்கூட இல்லை. அதுதான் வை.கோ. என்ற மனிதனின் மகத்தான சாதனை. பெரியாரின் உறுதிப்பாடு, அண்ணாவின் பண்பு வை.கோ.விடம் பளிச்சிட்டு நிற்கிறது.

வேகத்தால், விவேகத்தால், தீரத்தால், திறமையால் உயர்ந்து நிற்கும் இந்தத் தென்பாண்டிச்சிங்கம் தமிழன் பெற்ற கொடை. சினிமாவிலும், அரசியல் ஒழுக்கக்கேட்டிலும், ஊழலிலும் மூழ்கிக் கிடக்கும் ஒரு சமூகம்; வை.கோ. என்ற விலைமதிப்பற்ற வைரத்தை தன் மணிமுடியில் ஏற்றுக்கொண்டு வாய்ப்புக் கொடுக்குமா? வருங்காலம் அவரது தலைமைக்கு வழி சமைக்குமா? தன்மான உணர்வும் தமிழுணர்வும் உள்ள எந்தத் தமிழனும் வை.கோ.வை இதயத்துள் வைத்திருப்பான். ஈழத்தமிழர்கள் அவரை என்றுமே மறக்கமாட்டார்கள். வாழ்க வை.கோ! வளர்க அவர் தொண்டு.

– கோத்திரன்


KRISHNA
Textiles
பெப்ரவரி 7ம் தேதி
முதல் மக்கள் சேவையில்
புதிய வரவு
காஞ்சிபுரம், பெனாரஸ்,
ஆரணி, தர்மாவரம்,
கோலம், அபூர்வா மற்றும்
பட்டு வேட்டி, சால்வைகள்,
சுடிதார் வகைகள்,
குழந்தைகளுக்கான ஆடைகள்
லண்டனில் எங்கு
இருந்தாலும் நாட
வேண்டிய பட்டு மாளிகை
கிருஷ்ணா
டெக்ஸ்டைல்ஸ்
882 London Road, Thorntonheath,
Surrey CR7 7PB Tel : 020 8664 3195

(9)

# MITHUS JEWELLERY



# DIAMOND PALACE

322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792

76 Tooting Hig h Street
London SW17 0RN
Tel : 020 8767 5333
Fax : 020 8767 5814

மிதூஸ் ஜுவல்லர்ஸ் தனது சேவையில் 3 வது
வருடத்திலும், டயமன்ட் பேலஸ் தனது சேவையில் 5 வது
வருடத்திலும் காலெடுத்து வைக்கும்
இந்த நல்ல வேளையில் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எப்பொழுதும் இல்லாத குறைந்த விலையில்
நகைகளை வழங்க உள்ளோம். இந்த அரிய வாய்ப்பினை
அனைவரும் பெற்று இன்புறுமாறு அழைக்கின்றோம்.

Printed by VASAN PRINTERS 020 8646 2885